வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.11.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 339 | பக்கங்கள் : 16

# தடுப்பூசி பெறாதோருக்கு பொது இடங்களில் தடை!

## சுகாதார அமைச்சர் பாராளுமன்றில் அறிவிப்பு

■ சட்டமா அதிபரும் அனுமதி ■ இனங்காண விசேட செயலி



கொழும்பு. நவ. 09,

கோவிட் -19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு செல்வதை தடுப்பதற்கு சட்ட ரீதியான அனுமதி கிடைத்துள்ளது என்று பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

15

# மாஸ்க் அணியாத இருவருக்கு ரூ. 22,500 அபராதம்

## பருத்தித்துறை நீதிமன்று விதித்தது

வடமராட்சி, நவ. 09

முகக்கவசம் அணியாமல் ஊரடங்கு நேரம் நடமாடிய இருவருக்கு 22 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமாக விதித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.

கொரோனா ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த சமயத்தில் முகக் கவசம் அணியாமல் நடமாடிய ஒருவரும், ஊரடங்கு சட்டத்தை மீறியும், முகக் கவசம் அணியாமலும் பொது இடத்தில் நின்ற மற்றொருவரும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவருக்கும் எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். இதையடுத்து முகக் கவசம் அணியாத நபருக்கு 7 ஆயிரத்து 500

15

# 19 பேர் தொற்றால் பலி!

கொழும்பு, நவ. 09

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மேலும் 19 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட நாளாந்த அறிக்கையின் தகவலின்படி,

இறந்தவர்களில் 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 11 பேரும் உள்ளடங்குவர். இவர்களில் 13 ஆண்களும், 6 பெண்களும் அடங்குவர்.

இந்த மரணங்களுடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 875ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## தீவகத்தில் நேற்று கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி தடுப்பு

07



# பருத்தித்துறையில் 3 கி.மீற்றருக்கு குவிந்தது இனந்தெரியாத தாவரம்!

வடமராட்சி, நவ. 09

இனந்தெரியாத தாவரங்கள் பெருமளவில் பருத்தித்துறை கடற்கரையில் நேற்று காலை ஒதுங்கின. இதனால் மீனவர்கள் தமது படகுகள், வலைகளை கொண்டு செல்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

15

# தமிழர், முஸ்லிம் ஒன்றுபட்டால் கிழக்கு முதல்வர் பதவி எமக்கே!

## மு. கா. தலைவர் ரவூப் ஹக்கீம் சொல்கிறார்



யாழ்ப்பாணம், நவ. 09

தமிழர், முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட்டால் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி எங்களுக்கே வழங்கப்பட வேண்டும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக்

15

# ஆசிரியர் சமூகம் இன்று நாடு தழுவிய போராட்டம்

கொழும்பு, நவ. 09

அதிபர் - ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் இன்று சகல வலயக் கல்வித் திணைக்களங்களின் முன்பாகவும் நடைபெறவுள்ளன.

நாடு தழுவிய அதிபர் - ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தற்சமயம் வடிவம் மாற்றப்பட்டு புதிய வடிவங்களில் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில்வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் எமது பிரச்னைக்குத்

15

# வடக்குக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 09

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று, வடமேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வரவு - செலவு திட்டத்துக்கு அரசாங்கத்துக்குள் எதிர்ப்பு

## சு.கவின் ஒரு தரப்பு வெளியேற உத்தேசம்

கொழும்பு, நவ. 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் ஆளும்தரப்பு பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ள நிலையில், 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்திலும் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினர் வரவு- செல

15

# பொலிஸ் சித்திரவதைகள் நிரூபிக்கப்பட்டால் ஸ்கொட்லாந்து பயிற்சியை நிறுத்த வேண்டும்

## ஐ. நா. முன்னாள் அறிக்கையாளர் வலியுறுத்து

நியூயோர்க் நவ. 09

இலங்கை அரசாங்கத்தினால் அனுமதிக்கப்படுவதாக கூறப்படும் சித்திரவதைகள் நிரூபிக்கப்பட்டால், ஸ்கொட்லாந்து இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சியளிப்பதை நிறுத்த வேண்டும் என ஐ. நாவின் முன்னாள் மனித உரிமை சிறப்பு அறிக்கையாளர் பேராசிரியர் மன்பிரெட் நொவாக் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து ஸ்கொட்லாந்திற்கு தப்பி வந்த அகதிகள் இலங்கை பொலிஸாரின் ஈவிரக்கமற்ற தன்மை குறித்து தெரிவித்துள்ள விடயங்கள்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை



# த. தே. பசுமை இயக்கத்தால் வடமராட்சியில் மரநடுகை

வடமராட்சி, நவ. 09

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வட மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டுப் பொது அமைப்புகளின் மூலம் மர நடுகையை ஊக்குவித்து வருகிறது. இதனொரு கட்டமாக, வடமராட்சி அல்வாயிலுள்ள பொது அமைப்புகளின் வேண்டுகோள்களுக்கு இணங்க அவ்வமைப்புகளின் பிரதிநிதிகளிடம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மரக்கன்றுகளை வழங்கிவைத்து அப்பகுதிகளில் மரநடுகையையும் ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாண சபை கார்த்திகை மாதத்தை 2014ஆம் ஆண்டு வட மாகாண மர நடுகை மாதமாக பிரகடனப் படுத்தியது. இதையடுத்து ஆண்டுதோறும் இந்த மாதத்தில் தமிழ் மக்கள் மரநடுகையை உணர்வுபூர்வமாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ- 02 - 03)

# அம்பன் வைத்தியசாலையில் பரு. பொலிஸார் சிரமதானம்

வடமராட்சி, நவ. 09

பருத்தித்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் அம்பன் பிரதேச வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸார் ஏற்பாடு செய்த இந்த சிரமதானப் பணியில் பருத்தித்துறை பிரதேச சபை அம்பன் கிராம மக்கள் மற்றும் பொலிஸார் உட்பட சுமார் 100 பேர் வரை இணைந்து நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் ஈடுபட்டனர்.

இதில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எச். எம். ஹேரத்தும் பங்கேற்றிருந்தார். (ஐ-02)

# இலவச நீரிழிவு சோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும்!



யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை மக்களுக்கு நீரிழிவு பரிசோதனை மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு என்பன அண்மையில் இடம்பெற்றது.

வண்ணார்பண்ணை - முருகமூர்த்தி கோயிலடி ஐங்கரன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில்,கொமர்ஷல் வங்கி நிறைவேற்று அதிகாரி லயன் எஸ். ரகுநாதன் அனுசரணையில், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம், கோல்டன் ஸ்ரார் கழகத்தால் மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அத்துடன், நோர்வே நாட்டில் இருந்து வருகை தந்த விஜிதா அகிலன், நீரிழிவு பரிசோதனைக்கான உபகரணங்களை அன்பளிப்பு செய்த நிலையில் நீரிழிவு பரிசோதனைகளும் இடம்பெற்றன.

இதன்போது சுமார் இருநூறு பேர் இலவச மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொண்டனர், நூற்றுக்கும் அதிகமானவர்கள் நீரிழிவு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் லயன்ஸ் கழக தலைவர் கஜன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.ஜெரினா லயன்கழக உறுப் பினர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# தயாசிறிக்கு பதிலடி கொடுத்த மொட்டு கட்சி



கொழும்பு, நவ. 09

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் அறிவிப்புகள் தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை."- என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இராஜங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரச வீட்டில் இருக்கிறார். அரச வாகனங்களை பயன்படுத்துகின்றார். வரப்பிரதாசங்களை அனுபவிக்கின்றார். ஆனாலும் அரசை விமர்சிக்கிறார். அவர் அப்படிதான். அது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள தேவையில்லை."- என்றும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

# இந்த ஆண்டு மட்டும் 2.3 ட்ரில்லியன் கடன் பெற்ற அரசு



கொழும்பு, நவ. 09

தற்போதைய அரசாங்கம் 2021 ஆம் ஆண்டில் மட்டும் 2லட்சத்து 30ஆயிரம் கடன்களைப் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

குறித்த பெரியத்தொகை பணத்தை அரசாங்கம் எதற்கு பயன்படுத்தியது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

மேலும், கடந்த அரசாங்கத்தினால் பெறப்பட்ட கடன்களை தீர்பதற்கே குறித்த கடன் தொகை பெறப்பட்டது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் தாமரை கோபுரம், துறைமுகங்கள், மைதானங்கள், விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் குடும்பத்தினர் பயணம் செய்வதற்கும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பெரும் தொகை கடனாகப் பெறப்பட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

## வடமாகாண மரநடுகை மாதம் 09 கார்த்திகை 2021

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியிருக்காக மரங்களை நாட்டவேண்டும்"

- அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)

## கல்வி TV CHANNEL-1 — 09.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி TV CHANNEL - 2 — 09.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
09.11.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் கடமையும், பொறுப்பும்?

அனைத்து கட்சிகளும் இணைந்து இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக ரெலோவும் டி. பி. எல். எவ். (புளொட்) ஆகியவை இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தன. கூட்டமைப்பின் பிரதான கட்சியாக - கூடிய பாராளுமன்ற ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி இதில் பங்கு கொள்ளவில்லை. இந்தநிலையில் தமிழ் அரசு கட்சியையும் இணைத்துக் கொள்வது தொடர்பான பரிந்துரையுடன் கூட்டம் முடிவுற்றிருந்தது. இதில், மலையக மக்களை அதிகளவுக்கு பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணியும், முஸ்லிம் மக்களின் பிரதான தலைமையான முஸ்லிம் காங்கிரஸ்ும் பங்குகொண்டிருந்தன. இந்த அடிப்படையில் நோக்கினால் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களை பிரதிநித்துவம் செய்யும் பிரதான தலைமைகள் - இந்தியாவிடம் கோரிக்கை வைப்பது தொடர்பில் ஒன்றிணைந்திருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று பார்த்தாலும் அவர்களே பெரும்பான்மையினர். இப்படியானதொரு சந்திப்பையே தமிழ் அரசு கட்சி புறக்கணித்தது. இந்தப் பின்னணியில்தான் இன்று மாலை, இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ளாரென செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

கூட்டமைப்பில் தற்போது அங்கம் வகிக்கும் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் இந்தியாவிடம் பயிற்சி பெற்ற இயக்கங்கள். கூட்டமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றான ஈ. பி. ஆர். எல். எவ். வெளியில் இருக்கின்றது. இந்த மூன்று கட்சிகளும் இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பது தொடர்பில் ஓரணியில் நிற்கின்றன. இந்திய வெளிவிவகாரச் செயலர் ஹர்ஷ் வர்தன், ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்திலாவது தமிழ் கட்சிகள் ஒன்றுமையாக நிற்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு முன்னர் - இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் அவ்வாறானதொரு கருத்தை வலியுறுத்தியிருந்தார். புதிய அரசியல் யாப்பில் தங்களால் தலையீடு செய்ய முடியாதென்றும் குறிப்பிட்டிருந்தார். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டுதான், இந்தியாவிடம் கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான முழுத்தகுதியுள்ள முன்னாள் இயக்கங்கள் அனைத்தும் மேற்படி கூட்டத்தில் ஒன்றிணைந்திருந்தன. இதற்கு இந்தியா முழு ஆதரவை கொடுத்திருக்க வேண்டும்.

இந்தக் கூட்டம் இடம்பெற்று ஒரு சிலதினங்களில் - கூட்டமைப்பின் நிபுணர் குழுவொன்று அமெரிக்கா செல்லவுள்ளதான செய்தியொன்று வெளியாகியிருக்கின்றது. அந்தக் குழுவில் இந்தியாவிடம் கோரிக்கையொன்றை முன்வைக்க முயற்சித்த கட்சிகளின் தலைவர்களோ அல்லது அவைகளின் பிரதிநிதிகளோ இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஆகக் குறைந்தது ஒரு மரியாதைக்குக்கூட இந்த விடயம் தொடர்பில் பங்காளிக் கட்சிகளுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இதன் மூலம் அவர்களின் முன்னெடுப்புக்கள் புஸ்வாணம் ஆக்கப்பட்டு விடுமோ என்னும் சந்தேகம் அவர்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. பொதுவாக மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள் முன்னாள் இயக்கங்களை கருத்தில் கொள்வதில்லை. கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் இருக்கின்றபோதிலும்கூட சந்திப்புக்கள் அனைத்திலும் தமிழ் அரசு கட்சியினர் மட்டுமே இடம்பெறுகின்றனர். இந்த நிலையில் இந்தியாவிடம் பயிற்சி பெற்று, இந்தியாவை மட்டுமே நம்பியிருக்கும் கட்சிகளை இந்தியாவும் கைவிட்டால் அவர்களின் நிலை என்ன?

இந்திய தூதரகத்தில் தற்போதிருப்பவர்கள் அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. இந்தியாவின் வேண்டுகோளுக்காக அன்றும் இவர்கள் - ரி. என். ஏவாக செயல்பட்டவர்கள். அதாவது தமிழ் தேசிய இராணுவமாக செயல்பட்டவர்கள். இந்தியாவுடன் இணைந்திருந்த ஒரே காரணத்திற்காகவே தங்களின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை இழந்தவர்கள். எஞ்சியவர்கள்தான் இன்று ஜனநாயகக் கட்சிகளாக இருக்கின்றனர். இவர்களின் பின்னணிக்காகவே இன்றும் சில மேற்கு நாடுகள் இவர்களுக்கு வீசா வழங்குவதில்லை. இவர்களை மேற்குலக இராஜதந்திர சமூகம் கருத்தில் கொள்ளாத நிலையில், இந்தியாவும் கருத்தில் கொள்ளாமல்விட்டால் இவர்களின் நிலை என்ன? இவர்களுக்கான இராஜதந்திர அந்தஸ்தை இந்தியா மட்டுமே வழங்க முடியும்.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்திலும், சம்பந்தன் புதுடில்லியை தவிர்த்தே செயல்பட்டார். ஈ. பி. ஆர். எல். எவ் புதுடில்லிக்கு செல்வோம் என்று கூறிய போதும், அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இன்றும் இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்போம் என்று அனைவரும் ஒன்றுபட்டு நிற்கும் போதும், சம்பந்தன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி அதை நிராகரிக்கின்றது. இந்தியா யார் பக்கம்? இந்தியாவுடன் நிற்கவேண்டும் - இந்தியா வலியுறுத்தும் 13ஜை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று கூறுபவர்களுடனா? அல்லது இந்தியாவின் பங்களிப்பை உதட்டளவில் கூறிவிட்டு - பின்னர் அதனை சாதாரணமாக கடந்து செல்பவர்களுடனா?

# ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ தனக்குத்தானே அரசு வைத்த பொறி!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையின் நீதி அமைச்சராக முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த அலி சப்ரியும், சட்டமா அதிபராக தமிழரான சஞ்சய் ராஜரட்ணமும் பதவி வகித்து வருகின்ற நிலையில், ஆட்சியாளர்கள் தமது மனம்போன போக்கிலான நடவடிக்கைகள் மூலம் நீதித்துறையில் சங்கடங்களை எதிர்கொள்வதையே அவதானிக்க முடிகின்றது.

நீதியமைச்சர் அலிசப்ரி ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியாவார். அத்துடன், துணிச்சலோடு ‘ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற செயலணிக்கு சர்ச்சைக்குரிய பிக்குவான வண. ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டமையை கடுமையாகச் சாடியுள்ளதோடு தமது பதவியை இராஜிநாமா கடிதத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நீதி அமைச்சர் அலி சப்ரி கைளித்திருந்தார். ஆனால், ஜனாதிபதி நீதியமைச்சரின் இராஜிநாமாவை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். இருந்தபோதிலும் ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற செயலணி சிறுபான்மை மக்களை மட்டும் பாதிப்பதோடு அல்லாமல் சர்ச்சைக்குரிய பௌத்த குரு ஒருவரையும் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆட்சியதிகார விடயங்களில் தலையிட அனுமதித்துள்ளதையே சட்ட மா அதிபர் தமது பதவியை இராஜிநாமா செய்ய முன்வந்தமை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நிலையில் சிறுபான்மை இனத்தவர்கள் இருவர் நீதியமைச்சராகவும், சட்ட மா அதிபராகவும் இருக்கின்றமை பேரினவாத போக்கைக் கொண்டுள்ள அரச தரப்புக்கு சவாலான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

சட்ட மா அதிபர் ஓரிரு வாரங்களுக்கு முன்னர் துணிகரமான முறையில் மற்றோர் அறிவிப்பு ஒன்றை விடுத்திருந்தார். அந்த அறிவிப்பில் கடந்த மாதம் அநுராதபுரம் சிறையில் தமிழ் கைதிகளை மிரட்டியது தொடர்பான வழக்கில் ஆளும் கட்சி உறுப்பினரான லொஹான் ரத்வத்தவுக்கு அரசாங்கம் சார்பில் ஆஜராகப்போவதில்லை என்று சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

எனவே, நீதித்துறை, சட்டம் - ஒழுங்கு சார்ந்த விடயங்களில் தவறான முடிவுகளை எடுக்க முற்பட்டு அந்த முடிவுகள் தமக்குத் தாமே வைத்த பொறிகளாக மாறியுள்ள நிலைக்கு அரசு முகம் கொடுத்துள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற செயல் திட்டம் அது தொடர்பான செயலணி மூலமாக அரசு நியமித்துள்ள சர்ச்சைக்குரிய பௌத்த பிக்குவான ஞானசார தேரர் மூலம் செயல்படுத்தப்படுமேயானால் சிங்கள - பௌத்தமல்லாத இந்த நாட்டின் சிறுபான்மையின மக்கள் தமக்கென்று இருக்கின்ற தமது பாரம்பரியங்கள் சார்ந்த சட்டங்களையும் இழக்கக்கூடிய நிலை ஏற்படும். அத்துடன், யாழ்ப்பாணத்தவருக்கே உரிய தேசவழமைச்சட்டம்கூட அச்சுறுத்தலுக்குள்ளாகும் நிலைமை ஏற்படும்.

நீதியமைச்சரின் இராஜிநாமாவை ஏற்க மறுத்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமக்கு ஆலோசனை வழங்கும் வகையிலேயே ஞானசார தேரரை ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான செயலணியின் தலைவராக நியமித்துள்ளாரென ஜனாதிபதி, சட்ட மா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.


ஆனால், மறுபுறத்தே ஞானசார தேரரை ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற செயலணியின் தலைவராக நியமித்துள்ளமையை நோக்கும் போது சர்ச்சைக்குரிய அந்தப் பிக்குவை கட்டில் போட்டு அவரை கட்டுப்பாட்டில் வைப்பதற்காகவே ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற செயலணி ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

இன்றைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த நிலையே காணப்படுகின்றது. அரசியல் ரீதியாக தவறான முடிவுகள் எடுக்கப்பட்டுவரும் அதேசமயம் பொருளாதார ரீதியாகவும் நாடு அதலபாதாளத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடைய இருக்கின்ற அதே சமயம், சமையல் எரிவாயு, மற்றும் எரிபொருள் என்பவற்றின் விலைகளும் அதிகரித்து பஞ்சம், பட்டினிக்கான சூழலை அரசாங்கம் விரைந்து ஏற்படுத்தி வருகின்றது என்பதே பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

எனவே, நாட்டின் பொருளாதார நிலையை ஒழுங்குபடுத்த முடியாத நிலையில் மக்களின் கவனத்தை அரசியல் ரீதியாக திசைதிருப்ப ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை அறிவித்து அதற்கென ஒரு செயலணியையும் ஏற்படுத்தியதன் மூலம் அந்தச் செயலணியையே தனக்கு ஒரு பொறியாகவும் அரசாங்கம் மாற்றிவிட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன், மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் தீரும். சொத்து விஷயங்களில் கவனமாக முடிவெடுப்பது நல்லது. எதிலும் நிதானம், கவனம் தேவை. பணம் வர வாய்ப்புள்ளது.

**இடபம்**
முக்கிய விஷயங்களில் குடும்பத்தினருடன் கலந்து ஆலோசிப்பீர்கள். படபடப்பு, மறதி காரணமாக ஏற்பட்டிருந்த பிரச்னைகள் தீரும். திருமண விஷயமாக நல்ல செய்தி ஒன்று வந்து சேரும்.

**மிதுனம்**
திட்டம் ஒன்று வெற்றிகரமாக நிறைவேறும். தைரியம் கூடும். சொத்து சம்பந்தமாக வாரிசுதாரர்களிடையே உடன்பாடு உண்டாகும். சொந்தங்களின் உதவியுடன் சிறப்பாக செயல்படுவீர்கள்.

**கடகம்**
முன்பு தடைப்பட்ட நல்ல விஷயம் ஒன்று இன்று நிறைவேறும். சொத்து வாங்குவது சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். உங்களை கண்டுகொள்ளாமல் இருந்த உறவுகள் உதவி கேட்டு வருவர்.

**சிம்மம்**
மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் நல்லமுறையில் குணமடைவர். பேச்சில் கவனம். பழிவராமல் காத்துக்கொள்ளுங்கள். யோகம் உண்டாகும். நினைவாற்றல் உதவிகரமாக இருக்கும்.

**கன்னி**
நல்ல காரணங்களுக்காக இன்று வெளியூருக்கு செல்வீர்கள். வீடு, நிலம் வாங்குவீர்கள். அழகுணர்ச்சி அதிகரிக்கும். வெளிநாட்டில் வேலைபார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும்.

**துலாம்**
அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் உதவி கிடைக்கும். சுயதொழில் தொடங்கும் முயற்சியில் இன்று ஈடுபடுவீர்கள். நடக்குமா என்று கவலைப்பட்ட விஷயம் சாதகமாக கூடி வரும்.

**விருட்சிகம்**
எதிலும் சாதகமான நிலை இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீங்கள் முயன்ற வேலை சம்பந்தமாக நல்ல செய்தி வரும். மற்றவர்களின் ஒத்துழைப்பு காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு**
அலுவலக விஷயங்களில் யாருடனும் விவாதம் செய்ய வேண்டாம். சிலருக்கு வங்கி, அரசாங்கப் பணி கிடைக்கும் யோகம் உள்ளது. பதவி உயர்வு சம்பந்தமாக மகிழ்ச்சியான செய்தி வரும்.

**மகரம்**
மகிழ்ச்சி கூடும். கலைத்துறையினர் நல்ல பலன் காண்பர். குடும்ப மகிழ்ச்சி சீராக இருக்கும். நட்பு வட்டம் விரிவடையும். உங்களின் பயணங்கள் லாபமாக அமையும். கலை ஆர்வம் உண்டாகும்.

**கும்பம்**
உங்கள் மீது யாரும் கோபப்பட முடியாத அளவு நடந்து கொள்வீர்கள். கவலை தீரும். பணவரவு இருக்கும். பயணம் செல்ல வேண்டியிருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**மீனம்**
மனக்குறை நீங்கும். சண்டைகள் தீர்ந்து சமாதானமாகும். செலவினம் மகிழ்ச்சி அளிக்கும். குழந்தைகளால் நன்மை. கவலை ஏதுமின்றி ஆர்வமுடன் முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

# தமிழகத்துக்கு தேவையான உதவிகளை வழங்குவதாக பிரதமர் மோடி உறுதி

## வெள்ள பாதிப்பு விபரங்கள் குறித்து கேட்டறிந்தார்





சென்னை, நவ. 09

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக முதல்வர் மு. க. ஸ்டாலினிடம், தொலைபேசி மூலம் கேட்டறிந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தேவையான உதவிகளைச் செய்ய மத்திய அரசு தயாராக வுள்ளது எனவும் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் கடந்த இரண்டு வாரமாக மழை பெய்து வருகிறது. முக்கியமாகக் கடந்த 3 நாட்களாக அதி தீவிர கனமழை பெய்து கொண்டு இருக்கிறது. இதனால் சென்னை தீவு போல் காட்சி அளிக்கிறது.

இந்நிலையில், தமிழகத்தில் மழை பாதிப்பு குறித்து முதல்வர் மு. க. ஸ்டாலினிடம் பிரதமர் மோடி தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தார். இதுகுறித்து தமிழில் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், மாநிலத்தின் பல பகுதிகளில் கனமழையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து முதல்வர் ஸ்டாலினிடம் விவாதித்தேன். மீட்பு, நிவாரண நடவடிக்கைகளில் மத்திய அரசு சாத்தியமான அனைத்து உதவிகளையும் அளிக்கும் என உறுதியளித்தேன். அனைவரின் நலன், பாதுகாப்புக்குப் பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், மழைபாதிப்பு குறித்துக் கேட்டறிந்த பிரதமரிடம், தமிழக முதல்வர் வெள்ள பாதிப்புகள் குறித்தும், நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார். தமிழகத்தின் மாநில பேரிடர் நிதியானது கொரோனா பாதிப்புக்கும், இதுவரை ஏற்பட்டுள்ள பல்வேறு பாதிப்புகளுக்கு செலவிடப்பட்டுள்ளதால், போதுமான பேரிடர் நிவாரண நிதி தமிழகத்துக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதைக் கேட்டறிந்த பிரதமர், தமிழகத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர் செய்திடத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதாகவும், மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழை பயிற்றுமொழியாக்க முடியாது: ஒன்றிய அரசு

சென்னை, நவ. 09

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் தமிழ் மொழியை பயிற்றுமொழியாக்க இயலாது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கடம்பூரை சேர்ந்த செல்வகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல மனுவொன்று தாக்கல் செய்திருந்தார். அதில், "ஒன்றிய அரசு ஹிந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து, அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மீதமுள்ள 20 மொழிகளையும் புறக்கணிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. ஆனால், இந்தப் பள்ளிகளில் அந்தந்த மாநில மொழிகள் பயிற்று மொழிகளாகவோ, பாடங்களாகவோ இல்லை. அதனால் ஹிந்தி மற்றும் சமஸ்கிருதம் தெரியாத பிற மொழி பேசும் மாணவர்களை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகுவது உறுதியாகிறது. தமிழ்நாட்டில் இயங்கும் ஒன்றிய அரசின் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ் மொழியை கட்டாயப் பாடமாக்கவும், பயிற்று மொழியாக்கவும் உத்தரவிட வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் புஷ்பா சத்திய நாராயணன், வேல்முருகன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது ஒன்றிய அரசுத்தரப்பில், "தமிழ்நாட்டில் இயங்கும் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில், தமிழ் ஒரு பாடமாக உள்ளது. தமிழை பாடமாக பயில விரும்பும் மாணவர்கள் அதனை தேர்வு செய்து பயிலும் வகையில் உள்ளது. இதேபோல எந்த மாநிலத்தில் ஒன்றிய அரசு பள்ளி இயங்குகிறதோ, அங்கெல்லாம் அந்தந்த மாநில மொழி பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் விரும்பி னால் அதனை தேர்வு செய்து கொள்ளலாம். ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் ஒன்றிய அரசு பணியில் இருக்கும் ஊழியர்களின் குழந்தைகளுக்காகவே நடத்தப்படுகிறது. ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இடமாறுதல் வழங்கப்படும் போது அவர்களின் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்ற நோக்கிலேயே இந்த பள்ளிகள் நடத்தப்படுகின்றன. ஆகவே, அந்தந்த மாநில மொழிகளை பயிற்று மொழியாக்க இயலாது" என குறிப்பிடப்பட்டது.

# முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை உயர்த்தக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மதுரை, நவ. 09

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தக்கோரி மதுரை மாவட்ட மேலூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர். இதையொட்டி 58 கிராமங்களில் கடைகளும் அடைக்கப்பட்டன.

மதுரை மாவட்டம் மேலூரில் கர்னல் பென்னிக்குவிக் பஸ் நிலையம் முன்பு முல்லைப்பெரியாறு ஒரு போக பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. உட்பட ஏராளமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பெரியாறு அணை பாசனத்தின் கடைமடை பகுதியான வெள்ளலூர் பகுதியைச் சேர்ந்த 58 கிராமத்தினர் கடையடைப்பு செய்து 200-க்கும் மேற்பட்ட வாகனங்களில் குடும்பத்தினருடன் ஆயிரக்கணக்கானோர் ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மேலும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்தவர்கள், வியாபாரிகள் சங்கத்தினர், ஓட்டோ மற்றும் வாடகை வாகன சங்கத்தினர், மக்கள் உரிமை கழகத்தினர் உட்பட பல்வேறு அமைப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

முல்லைப்பெரியாறு அணையில் 142 அடிக்கு தண்ணீர் தேக்குவதை கேரளா அரசு தடுத்தது கண்டிக்கதக்கது. 152 அடியாக அணை நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும். 120 ஆண்டுகளாக பெரியாறு அணை தண்ணீரை தமிழக அமைச்சர்கள், பொதுப் பணித்துறை அதிகாரிகள் மட்டுமே திறந்து வந்த மரபை மீறி கேரள அமைச்சர்கள் தண்ணீர் திறந்துவிட்டதை கண்டிப்பது, உணவுப்பொருட்களுக்கு தமிழகத்தை மட்டுமே கேரளா நம்பியுள்ளது. எனவே தமிழக விவசாயிகளுக்கு துரோகம் செய்யக்கூடாது.

இதுதொடர்ந்தால் கேரள மாநிலத்திற்கு செல்லும் அனைத்து சாலைகளையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவது. என இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டன. இதுசம்பந்தமாக கண்டன கோஷங்களும் எழுப்பப்பட்டன.

# கோட்டாபய அரசை வீட்டுக்கு அனுப்ப அனைவருமே ஒன்றிணையவேண்டும்!

## *யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி அழைப்பு*



யாழ்ப்பாணம்,நவ. 09

**கோட்டாபய அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் விமல் ரட்நாயக்க தெரிவித்தார்.**

**நேற்று யாழ்ப்பாணத்தில் 'ஊரிலிருந்து தொடங்குவோம்' என்னும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள அரசாங்கமானது மக்களை ஏமாற்றும் தனது நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. குறிப்பாக இராணுவத்தைப் பயன்படுத்தி சேதன விவசாயத்தை வலுக்கட்டாயமாக தான் முன்னெடுப்பேன் என ஜனாதிபதி தெரிவிக்கும் அளவுக்கு இந்த நாட்டில் அராஜகம் காணப்படுகின்றது.

மேலும் இந்த நாட்டில் தற்போது பால்மா எரிவாயு போன்றவற்றுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் இந்த கோட்டாபய அரசாங்கமானது தனது குடும்ப ஆட்சியை மேன்மேலும் அதிகரித்து இந்த நாட்டில் அராஜகம் புரிந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக பச்சை, நீலம், சிவப்பு என பார்த்தால் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் இன்னல்களை முகம் கொடுக்கின்றார்கள்.

நாட்டில் ஒரு கோடி மக்கள் விவசாயிகளாக உள்ள நிலையில் ஒரு நெற்கதிர் என்றால் என்ன என்று தெரியாத ஜனாதிபதி தான் தற்போது விவசாயப் புரட்சி ஏற்படுத்துவதாகக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார்.

விவசாயப் பெருமக்களுடன் கலந்துரையாடி தான் சில முடிவுகளை எடுக்கவேண்டும். ஆனால் விவசாயியல்லாத விவசாயத்துறையை பற்றி தெரியாத ஒருவர் நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்குரிய தீர்மானங்களை எடுப்பது ஒரு வியப்பான விடயமாகும்.


எதிர்வரும் காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியை மாற்றி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் "ஊரிலிருந்து தொடங்குவோம்" என்ற தொனிப்பொருளிலான மக்களுடனான உரையாடலும் துண்டுபிரசுர விநியோகமும் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்க, அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது வியாபாரிகளிடமும் பொதுமக்களிடமும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த செயற்றிட்டமானது மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-03)



## 11 மாதங்களுக்குள் 22,902 பேருக்கு டெங்கு

கொழும்பு, நவ. 09

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 22,902 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைஅ டுத்து விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தீர்மானித்துள்ளது.

டெங்கு அபாய வலயமாக அடையாளங்காணப்பட்டுள்ள 59 சுகாதார வைத்திய பிரிவுகளில் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியே இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முப்படையினர், மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பொதுச்சுகாதார மருத்துவ நிபுணர் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதியின் பணிப்பில் 68,000 வீதிகள் அபிவிருத்தி

கொழும்பு, நவ. 09

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நாட்டில் 68000 வீதிகள் அபிவிருத்திக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 14,000 வீதிகளின் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 1500 வீதிகள் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அடுத்த மூன்று மாதங்களுக்குள் மேலும் 2,500 வீதிகள் திறக்கப்படும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் நெருக்கடி நிலை இருந்த போதிலும் நாட்டின் நெடுஞ்சாலை அபிவிருத்திகளை தொடர ஜனாதிபதி எங்களுக்கு அறிவுறுத்தினார். நாட்டில் கொடிய தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக அரசாங்கம் அவ்வப்போது ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய போதிலும், நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாக இந்த 1500 வீதிகளை மக்களிடம் கையளிக்க முடிந்துள்ளது - என்றார்.

## விடுபட்ட பாடத்திட்டத்தை 20 வாரங்களில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, நவ. 09

கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்கு பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, 20 வாரங்களுக்குள் படிப்பு இழப்பை முடிக்க கல்வி அமைச்சிடம் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே சுனில் ஜயந்த நவரத்ன மேற்கண்டவாறு கூறினார். 20 வாரங்களில் கல்வித் திட் டத்தின் கீழ் அத்தியாவசியமான விடயங்களை மாத்திரம் கற்பிக்குமாறு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஊற்றுப்புலம் கிராமத்தில் சிக்கவுள்ள 90 குடும்பங்கள்!

கிளிநொச்சி, நவ. 09

ஊற்றுப்புலம் கிராமத்தில் தனித்தீவாக 90 குடும்பங்கள் சிக்கவுள்ள நிலையில் அவசர நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வள்ளுவர் பண்ணையையும், நாவலர் பண்ணையையும் இணைக்கும் வீதியில் அமைந்துள்ள பாலத் தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த வீதி ஊடான வாகன போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பதிலாக அமைக்கப்பட்ட வீதிக்கு மேலாக குளத்தின் நீர் தேங்கி நிற்பதால் வாகனப் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவசர தேவையின் நிமித்தம் செல்பவர்கள், தொழிலுக்கு செல்பவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நோயாளர்களை அழைத்துச் செல்வதிலும், மாணவர்கள் பாடசாலை செல்வதிலும் பாரிய சவால் காணப்படுவதாக பிரதேச மக்கள் கூறினர்.

வாகனங்களை மறுபுறத்தில் நிறுத்திவிட்டு நோயாளர்களை தூக்கியே கடக்கவேண்டிய நிலை தற்போது உள்ளதாகவும், தொடர்ந்து மழை பெய்தால் முற்றாக போக்குவரத்து தடைப்பட்டு 90 குடும்பங்களும் தனியாக நீரில் சூழ்ந்த பிரதேசத்தில் சிக்கிக்கொள்ளும் அபாய நிலை காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த வீதியானது புதுமுறிப்பு குளத்தின் அலைகரை பகுதியை ஊடறுத்து செய்வதால், தொடர்ந்தும் இந்த நிலை காணப்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது 19 அடி கொள்ளளவு கொண்ட புதுமுறிப்புக்குளத்தின் நீர்மட்டம் 16 அடி 1 அங்குலமாகக் காணப்படுகின்றது. தொடர்ந்தும் நீர் வருகை காணப்படுவதால் நீர்மட்டம் அதிகரித்து போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை காணப்படுவதுடன், மக்கள் சிக்கிக் கொள்ளும் நிலையும் ஏற்படும்.

இந்நிலையில், உடனடியாக மாற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரியுள்ளனர். (அ)

## அக்ரஹார காப்புறுதிக்கு ஓய்வூதியர்கள் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 09

ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை அக்ரஹார காப்பீட்டுக்காக திரும்பப் பெறும் அரசின் முடிவுக்கு ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

கடந்த 29ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், ஓய்வூதியர்களிடம் இருந்து மாதம் 400 ரூபாயும், 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியர்களிடம் இருந்து மாதம் 600 ரூபாயும் பிடித்து வைக்க அரசு முடிவு செய்திருந்தது.

இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி நேற்று காலை அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியிடம் மனு ஒன்றை ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் பிரதிநிதிகள் கையளித்தனர். (அ)

# 16 ஆம் திகதி விவசாயிகளை நாட்டில் அணி திரட்டுவோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, நவ. 09

**அரசுக்கு எதிராக எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் முன்னெடுக்கப்படவுள்ள பெரும் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்த அரசால் விவசாயிகள் உட்பட அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழ்வதற்கு வழியில்லை. இந்நிலையில் விவசாயிகளின் கழுத்தை பிடித்துக்கூட சேதன பசளையை பயன்படுத்தி எனக்கு விவசாயம் செய்விக்க முடியும் என ஜனாதிபதி மிரட்டுகிறார். 16 ஆம் திகதி விவசாயிகள் வருவார்கள். முடியுமானால் கழுத்தைப் பிடித்துக் காட்டுங்கள்.



இந்த அரசு எல்லா வழிகளிலும் பெயில். நாட்டு மக்கள் இதனை உணர்ந்துள்ளனர். எனவே, 16 ஆம் திகதி நடைபெறும் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றார். (அ)



# கைதிகளை பார்வையிட அனுமதி!

கொழும்பு, நவ. 09

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் குறித்து சிறைச்சாலை திணைக்களம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து சிறைச்சாலைகளின் பதில் ஆணையாளரும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

அதன்படி வாரத்தில் இரண்டு நாட்கள், சிறைக் கைதிகளை பார்வையிட அவர்களின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# மொனராகலையில் தொற்றாளர் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 09

மொனராகலை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் 63 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுவரை மொனராகலை பொலிஸ் பிரிவில் 13ஆயிரத்து 65 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 209 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த மாதத்தின் இறுதி வாரத்தில் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் தற்போது நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

# தரம் 06 முதல் 09 வரை வகுப்புகளை ஆரம்பிப்பது தொடர்பில் அவதானம்

கொழும்பு, நவ. 09

கொரோனா அச்சுறுத்தலால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் கட்டம் கட்டமாக மீளத் திறக்கப்பட்டுவரும் நிலையில் தரம் 06 முதல் தரம் 09 வரையான தரங்களுக்கும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில், தற்போது கல்வி அமைச்சினால் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

கொரோனா வைரஸ் காரணமாகத் தவறவிடப்பட்ட கற்கைநெறிகளை 20 வாரங்களுக்குள் முழுமைப்படுத்துவது தொடர்பில், தேசிய கல்வி நிறுவகத்தினால் கல்வி அமைச்சுக்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்தார்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வருடத்துக்கான இறுதி பாடசாலை தவணையை, அடுத்த வருடம்



மார்ச் மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்குமாறு, தேசிய கல்வி நிறுவகத்தினால் கல்வி அமைச்சுக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப்படுத்துவதற்காகவும், பரீட்சைகளை நடத்துவதற்கான காலத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரட்ன கூறினார். (அ)

# கிராமசேவகர் பிரிவொன்றைக்கூட ஜனாதிபதியால் நிர்வகிக்கமுடியாது

## தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் 20,30 பேரைக் கொண்ட இராணுவக் குழுவை நிர்வகிக்க முடியுமே தவிர ஒரு கிராம சேவகர் பிரிவைக்கூட நிர்வகிக்க முடியாது என தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நிர்வாக முறைக் குறித்து தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் ஜனாதிபதி புத்திசாலியாகவும், படித்தவராகவும், சரியான நபர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். கேணல் ஒருவரிடம் தேவையற்ற விடயங்களைக் கேட்காதீர்கள். அவர் 20-30 பேரைக் கொண்ட இராணுவத்தின் துணைப்பிரிவை நிர்வகிக்க முடியும். ஆனால், ஒரு கிராம சேவகர் பிரிவைக் கூட அவரால் நிர்வகிக்க முடியாது.

அரசியல் எவ்வாறிருப்பினும் யுத்தத்தை நடத்தியது இராணுவத் தளபதியே தவிர கேணல் இல்லை. நான் கூறுவதை அவமானம் என்று தவறாக நினைக்காதீர்கள். அவர்கள் தலைமை தாங்கிய நூற்றுக்



கணக்கான கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஒரு அதிகாரி மற்றும் நிறுவனத் தலைவர் என்ற வகையிலும், அவர்கள் எடுக்கும் மோசமான தீர்மானங்களை அடிக்கடி அனுபவித்த ஒருவர் என்ற வகையிலும் இதைச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# இறம்பொடையில் மண்சரிவு

கொழும்பு, நவ. 09

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் ஆங்காங்கே பாதைகளிலும், விவசாயக் காணிகளிலும், வீடுகளுக்கு அருகிலும் மண்சரிவு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று திங்கட்கிழமை காலை 7 மணியளவில் நுவரெலியா-கண்டி பிரதான வீதியில் இறம்பொடை நகருக்கு அருகிலுள்ள பாதையில் மண்மேடொன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் போக்குவரத்து சில மணித்தியாலயங்கள் தடைப்பட்டது. வாகனங்களில் சென்றவர்களும் அப்பிரதேச கிராம மக்களும் இணைந்து சரிந்து விழுந்த மரங்களையும் மண்ணையும் அகற்றி பாதையை துப்பரவு செய்தனர். அதன் பின்னர் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.





# மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்கு வருகை

கொழும்பு, நவ. 09

பங்களாதேஷ், மாலைதீவுகள், சீஷெல்ஸ், இலங்கை ஆகிய நான்கு நாடுகள் பங்குபற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ண சர்வதேச அழைப்பு உதைபந்தாட்டப் போட்டி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நேற்று ஆரம்பமானது.

இதன் ஆரம்ப நிகழ்வுக்காக மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சொலி, நேற்றுக் காலை இலங்கைக்கு வருகை தந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ண சர்வதேச அழைப்பு உதைபந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகளுக்காக, இலங்கையின் அழைப்பை ஏற்று விசேட அதிதியாக கலந்துகொள்ளும் நோக்கில் அவர் நேற்று நாட்டுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# தீவகத்தில் நேற்று கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி தடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 09

**மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த கடற்படையினருக்கான காணி சுவீகரிப்புக்கான காணி அளவீடு செய்யும் பணி, பொதுமக்களின் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**

**அத்துடன், காணி சுவிகரிப்புக்கு வருகை தந்த நில அளவைத் திணைக்கள அரச அலுவலர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்.**

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கடற்படையினரின் தேவைக்காக, நேற்றுக் காலை, 3 இடங்களில் ஒரே நாளில் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக, நில அளவை திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜே/10 கிராமசேவையாளர் பிரிவு - அல்லைப்பிட்டியில், 7 பரப்பு காணியும், ஜே/11 பிரிவு - மண்கும்பானில், 4 பரப்பு காணியும் அதேபோல் புங்குடுதீவு - வல்லன் பகுதியில் பொது மக்களுக்கு சொந்தமான காணிகளும், கடற்படையினரின் தேவைகளுக்காக காணி சுவீகரிக்கப்படுவதற்காக குறித்த காணிகளை அளவீடு செய்வதற்காக நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நேற்றுக் காலை 9.30 மணியளவில், அவ்விடத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது, பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர், திணைக்கள வாகனத்தை தடுத்து நிறுத்தி, எதிர்ப்பு தெரிவித்ததால், காணி சுவீகரிப்பு செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட்டது. (அ-03)

## வரவு-செலவுத் திட்டத்துக்காக 102 பேரிடமிருந்து பரிந்துரைகள்

கொழும்பு, நவ. 09

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக அதிகமான வர்களிடம் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கமைய நிறுவனங்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரிடம் இவ்வாறு பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு தொழிற்துறை நிபுணர்கள் என சுமார் 102 பேரிடம் இவ்வாறு பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## யுகதனவி ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பிக்க எதிரணி கோரிக்கை

கொழும்பு, நவ. 09

யுகதனவி ஒப்பந்தத்தை பாராளுமன்றில் சமர்பிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

பாராளுமன்றில் நேற்று திங்கட்கிழமை ஐக்கியத் தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்டோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னரே, அது தொடர்பிலான எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை அறிவிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எனவே அதனை விரைவில் சபையில் முன்வைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்தன, விரைவில் அதற்குரிய ஆவணங்களை முன்வைக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார். (அ)



## சிறில் காமினிக்கு ஆதரவாக அருட்தந்தையர் போராட்டம்

கொழும்பு, நவ. 09

அருட்தந்தை சிறில் காமினியை கைது செய்யக்கூடாது எனக் கோரி உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் இடம்பெற்றது.

சிறில் காமினி பெர்னாண்டோ தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றபோதே அருட்தந்தையர்களினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்துக்கு மகா சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்தனர். (அ)

## பண்டிகை காலத்தில் கோவிட் கட்டுப்பாடுகளை கடுமையாக்க தயாராகிறது சுகாதார அமைச்சு!

கொழும்பு, நவ. 09

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை காலத்தில் கடுமையான கோவிட் சுகாதார வழிகாட்டல் கட்டுப்பாடுகளை விதிக்க சுகாதார அமைச்சு தயாராகி வருவதாக தெரியவருகின்றது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை நாட்களில் பல நிகழ்வுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன.

இக்காலப் பகுதிகளில் வணிக வளாகங்களில் அதிகளவானோர் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹோட்டல்கள் மற்றும் பிற இடங்களில் பண்டிகை கொண்டாட்ட நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே மற்றொரு புத்தாண்டுக் கொத்தணியை தவிர்க்கும் நோக்குடன், பண்டிகைக் காலத்தில் கடுமையான சுகாதார வழிகாட்டல்களை அமுல்படுத்த சுகாதார அமைச்சு தயாராகி வருகிறது.

வழக்கமான முறையில் புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்துவதைத் தடுக்கும் நோக்குடன் அதிகளவானவர்கள் ஒன்றுகூட தடை விதிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய பின்னர் பண்டிகைக் கால கட்டுப்பாடுகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் குறைந்து வந்த கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் சிறிது - சிறிதாக அதகரித்து வரும் நிலையிலேயே பண்டிகைக் காலத்தை ஒட்டிக் கடும் கட்டுப்பாடுகளை விதிக்க சுகாதார அமைச்சு தயாராகி வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# மாணவர்களுக்கு தடுப்பூசிகள் முறையாக வழங்கப்படவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, நவ. 09

பாடசாலைகளை முழுமையாக ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்கவும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சகல ஆரம்ப பாடசாலைகளையும் ஒரே நேரத்தில் ஆரம்பித்தார்கள். அதே நடவடிக்கையே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலக்கட்டத்தில் மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் கொரோனா தொற்று நிலைமை உருவாகியுள்ளது.

ஆகவே பாடசாலைகளின் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பிலும் கொரோனா பரவல் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பிலும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பை கருத்தில் கொண்டு தனியான போக்குவரத்துகள் ஆரம்பிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால், இது வரையில் அவ்வாறான எந்த ஏற்பாடுகளும் இல்லை. மாணவர்களின் போக்குவரத்து தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமலேயே பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அநேகமான மாணவர்கள் முச்சக்கர வண்டிகளினூடாக பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள்.



அதனால், மாணவர்களின் செலவுகள் அதிகரித்துள்ளன.

கூறியது எதனையும் செய்யாமலேயே பாடசாலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

போக்குவரத்து வசதி , தடுப்பூசி செலுத்துதல், சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் எந்த அவதானமும் செலுத்தப்படவில்லை. ஒரே முகக் கவசத்தை தொடர்ச்சியாக அணிய முடியாது. அவ்வாறு அணிவதால் மாணவர்களே சிக்கல் நிலையை சந்திப்பார்கள். தரமான முகக் கவசங்களை கொள்வனவு செய்வதற்கும் அவர்கள் தனியாக செலவு செய்ய வேண்டும்.

ஆகவே,குறைந்தது முகக்கவசத்தையாவது மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். எது எவ்வாறாயினும் எங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். கற்பித்தல் நடவடிக்கைகள் தவிர வேறு எந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்கமாட்டோம்- என்றார். (அ)



# வடக்கில் அழிக்கப்படும் கண்டல் தாவர காடுகள்

**கருணாகரன்**

> **தமிழ்ப் பிரதேசங்களில்தான் இவ்வாறான சூழலியற் படுகொலையும் சட்ட விரோதக் காடழிப்பும் அதிகமாக நடக்கிறது. ஒப்பீட்டளவில் சிங்களப் பகுதிகளில் காட்டையும் சூழலையும் பேணும் - பாதுகாக்கும் பண்பைக் காணலாம். அங்குள்ள அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மதகுருக்களும் சூழலியலில் கூடுதலான அக்கறையோடிருப்பதைக் காணலாம்.**

கடந்த வாரம் முல்லைத்தீவுக்குப் போனபோது பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் புதுக்குடியிருப்புக்கும் வட்டுவாகலுக்கும் இடைப்பட்ட நந்திக் கடலோரத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்து விட்டேன். அங்கேயிருந்த அலையாத்திக் காடுகளை (கண்டற் காடுகளை) காணவில்லை. தெருவுக்கும் கடலுக்குமிடையிலிருந்த சிறுபற்றைக் காடுகளுமில்லை. ஏறக்குறைய ஏழு கிலோ மீற்றர் வரையான காடுகள் ஒரு ஆண்டுக்குள் அழிக்கப்பட்டுள்ளன.

பட்டப்பகலில் நடந்த கொள்ளை என்பார்களே, அதைப்போல எல்லோருடைய கண்ணுக்கு முன்னே இந்த அநீதி நடந்துள்ளது. சந்தேகமேயில்லை. இது மிகப் பெரிய அநீதியே. அந்தப் பகுதி மக்களுக்கு, அங்குள்ள மீனவர்களுக்கு, கடல்வாழ் உயிரினங்களுக்கு, அந்தக் களப்புக் கடலுக்கு, அதைச் சுற்றியிருக்கும் பறவைகள், விலங்குகள் என அனைத்துத் தரப்பிற்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி இது.

இந்தக் காடும் நிலமும் அரசுக்குரியது. இதைப் பாதுகாத்திருக்க வேண்டியது முதலில் அரச நிறுவனங்கள் - திணைக்களங்களாகும். குறிப்பாக கடல்வள அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், சுற்றுச் சூழல் அதிகாரசபை, வனத்திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், கனிம வளங்கள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவை. அடுத்ததாக அரசியல்வாதிகளும் அரசியற் கட்சிகளும். அடுத்ததாக அந்தப் பகுதியில் உள்ள சூழலியல் ஆர்வலர்கள், மதத்தலைவர்கள், மக்கள் அமைப்புகள், புத்திஜீவிகள் தொடக்கம் ஒவ்வொரு பொதுமக்களும் இந்தக் காடுகளைப் பாதுகாத்திருக்க வேண்டும்.

ஏனென்றால் இந்தக் காடுகளே நந்திக்கடலை - அந்தக் களப்பைப் பாதுகாக்கின்றன. களப்புக் கடலை வளப்படுத்துவது இந்தக் காடுகளிலிருந்து மழைக் காலத்தில் வடிந்தோடும் வண்டல் நீராகும். இந்த வண்டல் நீரிலிருந்து களப்புக்குக் கிடைக்கும் கனிமங்களும் உணவுமே கடல்வாழ் உயிரினங்களுக்கானது. அதோடு கடலோரத்தில் நிற்கும் கண்டல் மரங்கள் “அலையாத்தி”யாக நிற்கின்றன. இது களப்பின் நீரை சூடேறாமல் பாதுகாப்பதுடன் கரையோரத்தையும் பாதுகாக்கின்றன.

அத்துடன் இந்தக் கண்டல் காட்டிலும் கரையோரக் காட்டிலும் ஏராளமான கொடிகளும் செடிகளும் நிறைந்து சூழலையும் மண்ணையும் வளப்படுத்துகின்றன. இயற்கைச் சூழலைச் சமநிலையில் வைத்திருக்கின்றன. கூடவே இந்தக் காட்டில் கடற்பறவைகள் தொடக்கம் வலசையாக வரும் பறவைகள் மற்றும் ஏனைய உள்ளூர் பட்சிகள் வரையில் ஆயிரக்கணக்கான வானுயிர்கள் தங்கியிருந்தன. இன்று இவை ஒன்றுமே இல்லாமல் சுடுகாடுமாதிரி வெட்ட வெளியாக்கப்பட்டுள்ளது.

இந்த வெளியில் தற்போது நெல்லும் சேனைப் பயிரும் பயிரிடப்படுகிறது. அங்கங்கே ஒரு சிலர் தென்னைகளை நட்டிருக்கிறார்கள். இதெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே வருவாயைத் தரக்கூடியன. அதற்குப் பிறகு களப்புக்கடல் சேற்றுக் குளமாகி விடும். அந்தச் சூழலே கெட்டு நாறிப் போகும். எந்தப் பயிரும் விளைய முடியாத தரிசாகி விடும். அந்தளவுக்கு நிலம் கெட்டு உவர் பெருகி விடும். இப்படி மனிதர்களின் ஆசையினாலும் முட்டாள் தனத்தினாலும் அழிந்து போன காடுகளும் நிலங்களும் ஏராளமுண்டு. அதிலிருந்து நாம் எதைத்தான் படித்திருக்கிறோம்?

இவ்வளவுக்கும் இது இறுதி யுத்தம் நடந்த பிரதேசமாகும். யுத்தத்தின்போது கூட இந்தப் பிரதேசம் இப்படி அழியவில்லை. யுத்தத்திற்கு முன்பும் யுத்தத்தின்போதும் யுத்தம் முடிந்த பின்னும் கூட நந்திக்கடல் களப்புக் கரை அழகாகவே இருந்தது. வளம் பூத்துக் கிடந்தது. பசுமை பொலிந்திருந்தது. இப்பொழுது?

இதற்கு சம்மந்தப்பட்டவர்கள் என்ன பதிலை வைத்திருக்கின்றனர்? சில நாடுகளில் என்றால் இதற்கு எதிராக மக்கள் அமைப்புகளோ தனி நபர்களோ வழக்குத் தாக்கல் செய்திருப்பார்கள். அப்படிச் செய்ய வேண்டும். அதுதான் உண்மையான மண் பற்று. நாட்டுப் பற்று. சமூகப் பற்றாகும். ஆனால் அப்படியான எந்தப் பற்றும் நம்முடைய அரசியற் கட்சிகளுக்கும் இல்லை. தலைவர்களுக்கும் இல்லை. அப்படித்தான் அரச நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும் கிடையாது. கேட்டால் இதற்கு தாம் பொறுப்பில்லை. அதோ அந்தத் திணைக்களம்தான் பொறுப்பு. அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பார்கள். இப்படித் தம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டு பிறரின் தலையில் அதைப் பொறுப்பித்து விட முயற்சிப்பார்கள். இது ஒரு கூட்டுப் பணி. அதற்கான கூட்டுப்பொறுப்பு என்பதை உணர்ந்து செயற்பட மாட்டார்கள்.

இதேநிலைதான் மக்கள் அமைப்புகளுக்கும் மதத்தலைவர்கள், புத்திஜீவிகளுடையதும். ஏனென்றால் இந்தக் காணியை அபகரித்தவர்களும் காடுகளை அழித்தவர்களும் அந்தப் பிரதேசத்தில் வலுவான நிலையில் இருப்போர். இவர்களை எப்படிப் பகைத்துக் கொள்வது? ஏன் கொள்ள வேண்டும் என்ற தயக்க நிலையினால் கண்டும் காணதிருந்து விடுகின்றனர். ஆகவே ஒட்டு மொத்தத்தில் இதற்காக அனைவரும் வெட்கப்பட வேண்டும். பல நூறு ஆண்டுகளாகவே பாதுகாப்பாக இருந்த ஒரு அரண் இன்று தமக்கு முன்னாலேயே அழிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு வெட்கப்படாமல் இருக்க முடியுமா?

இது தனியே நந்திக்கடலோரத்தில் நடக்கும் அநீதி மட்டுமல்ல. இதே அநீதிதான் கிளிநொச்சி நகரில் உள்ள குளத்தோரக் காணிகளைப் பிடிக்கும்போதும் நடந்தது. குளத்தின் நீரேந்து பகுதியும் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமும் காணாமல் போய் விட்டன. இயக்கச்சியிலும் பளையிலும் வடமராட்சி கிழக்கிலும் இந்த அநியாயம் தாராளமாக நடக்கிறது. காடழிப்பும் மணல் அகழ்வும் சர்வசாதாரணமாகி விட்டன. இதைச் செய்யாதவர்கள் ஏதோ இயலாதவர்கள் என்ற மாதிரி ஒரு தோற்றப்பாடு உருவாகியிருக்கிறது. அந்தளவுக்குச் சமூகத்தின் கூட்டு மனநிலை வளர்ந்துள்ளது. காணி பிடிக்க முடியாதவர்களும் காடழிக்கத் தெரியாதவர்களும் வல்லமை குறைந்தவர்கள் என்ற பார்வை இது.

இதேபோலவே வவுனியாவிலும் பல குளங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் எல்லாம் அடாத்தாகப் பிடிக்கப்பட்டுவிட்டன. பத்தாண்டுகளுக்கு முன்பு பார்த்த குளப் பிரதேசத்தை இன்று யாரும் தேடவும் முடியாது. அந்தளவுக்கு தாழ்வான பகுதிகள் எல்லாமே மேடாக்கப்பட்டு விட்டன.

குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்களில்தான் இவ்வாறான சூழலியற் படுகொலையும் சட்ட விரோதக் காடழிப்பும் அதிகமாக நடக்கிறது. ஒப்பீட்டளவில் சிங்களப் பகுதிகளில் காட்டையும் சூழலையும் பேணும் - பாதுகாக்கும் பண்பைக் காணலாம். அங்குள்ள அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மதகுருக்களும் சூழலியலில் கூடுதலான அக்கறையோடிருப்பதைக் காணலாம்.

தமிழர் தரப்பில் வாய்ப்பேச்சு அதிகமே தவிர, நடைமுறை எதிர்மாறானது. மண் பற்று என்பார்கள். மறுவளமாக மண்ணை அகழ்ந்து விற்று விடுவார்கள். மர நடுகையை விழா எடுத்து நடுவார்கள். சத்தமில்லாமல் மறுவளத்தில் காடுகளை அழிப்பார்கள். தாய் மண்ணின் மீது பற்றும் பாசமும் என்று பொழிந்து தள்ளுவார்கள். மறுபக்கத்தில் அந்தத் தாய் மண்ணை எப்படியெல்லாம் சீரழிக்க முடியுமோ அதைச் செய்து விடுவார்கள்.

என்பதால் தமிழ்ச்சமூகத்தை அதிகமாக நம்பிப்பயனில்லை. ஒப்பீட்டளவில், புலிகளின் காலத்தில்தான் உச்ச அளவில் சூழல் பாதுகாப்பு வலுவானதாக இருந்தது. அவர்கள் மரம் வெட்டுவதை 1980களின் நடுப்பகுதியிலிருந்தே தடுத்தனர். அதற்காகக் கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்திருந்தனர். அறிவித்தலை மீறி தவறான முறையில் மரம் ஏற்றிச் சென்ற லொறிகள் பல புலிகளால் எரியூட்டப்பட்டன. காடு அழிப்பில் ஈடுபட்டோர் ஆறுமாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டு மரநடுகையிலும் காடு பராமரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

மட்டுமல்ல தங்களுடைய கட்டுப்பாட்டுப்பகுதிகளிலே பல ஆயிரக்கணக்கான மரங்களைப் புலிகள் நடுகை செய்தனர். அதாவது புதிய காடுகளை உருவாக்கினார்கள். அந்தக் காடுகள் பல இடங்களிலும் இன்றும் செழிப்பாக உள்ளன. அதில் ஒரு காடு அண்மையில் அழிப்பதற்காக எரிக்கப்பட்டிருக்கிறது. முறிகண்டி -ஜெயபுரம் வீதியில் உள்ள வன்னேரிக்குளம் காடு. சிலருடைய சுயநலம் அந்தளவுக்கு மோசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இதற்கு சட்டபூர்வமான சில நடவடிக்கைகளே பாதுகாப்பைத் தரும்.

முக்கியமாக பொறுப்பற்ற விதமாகச் செயற்படும் அரச திணைக்களங்களின் அதிகாரிகளை சட்டத்தின் முன்னும் சமூகத்தின் முன்னும் நிறுத்த வேண்டும். சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் அதைச் செய்யவில்லை என்றால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதில் தவறென்ன?

இங்கே நடப்பது என்னவென்றால், சில அதிகாரிகள் சனங்களோடு சனமாக நின்று தமக்கான காணியைப் பிடிக்கின்ற சங்கதிகளும் நடப்பதுண்டு. இப்படிச் செய்தால் கள்வர்களை காவற்காரர் காப்பாற்றுவதாகத்தானே அமையும்.

ஆகவே இதைக்குறித்து அரசாங்கம் உடனடியாகக் கவனம் கொள்ள வேண்டும். சிவில் அதிகாரிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இவற்றைக் கவனிக்கவில்லை என்றால், பேசாமல் படையினரின் பொறுப்பில் இதை விட்டு விட வேண்டியதுதான்.

காணி அதிகாரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அது கிடைக்க முன்பே காணிகளை - காடுகளை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம், பாதுகாக்கிறோம் என்று ஒரு தரம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

**- அரங்கம்**





# ‘மக்கள் நீதி மய்யம்’ கட்சிக்கு என்ன ஆனது?

**இரா.செந்தில்**

**“ கமலின் மக்கள் நீதி மய்யம் சந்தித்த முதல் தேர்தலிலேயே கணிசமான வாக்குகளை வாங்கிய கட்சி, உள்ளாட்சித் தேர்தலில் ஓர் இடத்தில்கூட வெற்றிபெறவில்லை. அதைவிட போட்டியிடுவதற்கு வேட்பாளர்களே இல்லை. முதல் தேர்தலில் கட்சிக்குக் கட்டமைப்பு இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால், மூன்று தேர்தலுக்குப் பிறகும் இந்தக் காரணத்தைச் சொல்வதை ஏற்க முடியாது.**

**1984** ஆண்டு தமிழக சட்ட மன்றத் தேர்தலுக்கு முன்பாக, சிகிச்சைக் காக அமெரிக்கா சென்றுவிட்டார் எம்.ஜி.ஆர். அப்போது அவருக்கு பதிலாக ஜெயலலிதா தமிழகம் முழுவதும் சூறாவளியாகச் சுற்றுப்பயணம் செய்தார். அ.தி.மு.க கூட்டணி அந்தத் தேர்தலில் 195 இடங்களைப் பிடித்து மகத்தான வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர் இல்லாமலேயே ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது அ.தி.மு.க. அந்தக் கட்சியில் அப்போது ஆர்.எம். வீரப்பன் உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள் இருந்தும், ஜெயலலிதாவின் பிரசாரமே தேவைப்பட்டது. ஜெயலலிதா நடிகையாகவும், மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமானவராகவும் இருந்ததால் அவரின் பிரசாரம் மக்கள் மத்தியில் எடுபட்டது!

திரைத்துறையினர் அரசியலுக்கு வருவதிலுள்ள சாதகமான அம்சம் இதுதான். அரசியல் கட்சி ஆரம்பிக்கும் போதே அந்த சாதகமான பக்கத்துடன் வந்தவர்தான் நடிகர் கமல்ஹாசன். ஆனால், கட்சி ஆரம்பித்தபோது மக்கள் அவருக்கு அளித்த ஆதரவு நாளுக்கு நாள் குறைந்து, அந்தக் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் அனைவரும் வெளி யேறி, இப்போது கமலின் கட்சி எங்கே எனத் தேடும் நிலைக்கு வந்து நிற்கிறது. சின்னச் சின்னக் கட்சிகளைப்போல ம.நீ.ம-வைப் புறந்தள்ள முடியாது.

கட்சி ஆரம்பித்த ஒரு வருடத் திலேயே தேர்தலைச் சந்தித்து, கிட்டத்தட்ட நான்கு சதவிகித வாக்குகளைப் பெற்றது ம.நீ.ம. கடந்த சட்டமன்றத் தேர்தலி லேயேகூட கோவை தெற்குத் தொகுதியில் கமல் தோற்ற போது, கட்சி பேதமின்றி பெரும் பாலான மக்கள் அவரது தோல் விக்கு வருந்தினர். அப்படியான கட்சிக்கு என்னதான் ஆனது?

“இன்னும் அரசியல் கட்சி ஆரம்பிக்கலை. அதற்கான அறி விப்புகள்கூட இன்னும் வெளியா கவில்லை. ஆனால் பாருங்கள், உள்ளாட்சித் தேர்தல்ல வெற்றி பெற்ற மக்கள் மன்ற நிர்வாகி களைச் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கிறார் நடிகர் விஜய். ஆனால், கட்சி ஆரம்பிச்சு மூன்று வருஷம் ஆகிவிட்டது. 2019 பாராளுமன்றத் தேர்தல், 2021 சட்ட மன்றத் தேர்தல், இப்போ நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் என்று மூன்று தேர் தலைச் சந்தித்த கட்சியோட தலைவர், தேர்தல் முடிவு பற்றிய எந்த அக்கறையும் இல்லாம இருக்கிறார். தேர்தலில் எங்கள் கட்சி சார்பில் யாரும் வெற்றிபெற வில்லை. ஆனால், தோல்விக்கான காரணம் குறித்து ஒரு கூட்டத்தையாவது கூட்டியிருக்கலாம்” என ஆதங்கத்தோடு கட்சியிலுள்ள பிரச்னைகள் குறித்துப் பேசத் தொடங்கினார்கள் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் சிலர்.

“2006-லேயே கட்சி ஆரம்பிச்ச விஜய காந்தாக இருக்கட்டும், ஏன் இனிமேல் கட்சி ஆரம்பிக்கப்போறதா சொல்ற விஜய்யாக இருக்கட்டும், கொஞ்சம் கொஞ்சமாக தங்களோட அரசியலுக் கான வேலைகளைத் தொடங்கினார்கள். விஜயகாந்த் 2000ஆம் ஆண்டிலிருந்தே அதற்கான வேலைகளைத் தொடங்கி விட்டார். 2001-இல் அவர்கள் மன்றம் சார்பாக உள்ளாட்சித் தேர்தல்ல போட்டி போட்டு வெற்றி பெற்றார்கள். அதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் போனார் விஜயகாந்த். கட்சி ஆரம்பித்த முதல் தேர்தலிலேயே தனக் கான வாக்குவங்கியை நிரூபித்து, எதிர்க் கட்சித் தலைவர் பதவி வரைக்கும் வந்தார் விஜயகாந்த். ஆனால், எங்க தலைவர்... கட்சி ஆரம்பிக்குறதுக்கு ஆறு மாசத்துக்கு முன்னர் வரைக்கும் கூட அவருக்கு அந்த எண்ணம் இல்லை.

விஜய் எதிர்காலத்துக்கான வேலை களை இப்பவே தொடங்கிவிட்டார். ஏன், கட்சி ஆரம்பிக்காத ரஜினிகூட அறி விப்பு வெளியிட்ட பின்னர் ஆட்களை தயார் செய்தார். ஆனால், எங்க தலைவர் இன்று வரைக்கும் அதற்கான எந்த வேலையையும் துரிதப்படுத்தாம இருக் கிறார். அவருக்கும் நிர்வாகிகளுக்கும் இருக்குற இடைவெளி, சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலான இடைவெளியென்றால், கட்சி நிர்வாகி களுக்கும் மக்களுக்குமான இடைவெளி சென்னைக்கும் புதுடில்லிக்குமான இடைவெளியா இருக்கிறது. தமிழ் நாட்டின் கடைக்கோடி கிராமத்துலகூட எங்கள் தலைவரை ஒரு நடிகனாத் தெரியுது. ஆனா, “கமல்ஹாசன் கட்சி வைத்திருக்கிறாரா?” என்று கேட்கிற நிலைமைதான் இருக்கிறது.

சீமானை திரைப் பிரபலமா யாருக் கும் தெரியவில்லை. ஆனால், அவர் கட்சி இருக்குறது எல்லாருக்கும் தெரிந் திருக்குது. கட்சித் தலைமையும் சரி, மாநில அளவிலான நிர்வாகிகளும் சரி... கட்சியில கீழ்மட்ட நிர்வாகிகள், தொண் டர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். ஆனால், இவர் அவர்களை மிரட்டிக்கொண்டு இருக்கிறார். இதை யெல்லாம் சரிசெய்யாமல் எத்தனை தேர்தலில் நின்னாலும் வேலைக்கு ஆகாது” என்றார்கள் கட்சித் தொண்டர்கள் ஆதங்கத்தோடு.

அரசியல் விமர்சகர்கள் பேசும்போது “சந்தித்த முதல் தேர்தலிலேயே கணிச மான வாக்குகளை வாங்கிய கட்சி, உள் ளாட்சித் தேர்தலில் ஓர் இடத்தில்கூட வெற்றிபெறவில்லை. அதைவிட போட்டியிடுவதற்கு வேட்பாளர்களே இல்லை. முதல் தேர்தலில் கட்சிக்குக் கட்டமைப்பு இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால், மூன்று தேர்த லுக்குப் பிறகும் இந்தக் காரணத்தைச் சொல்வதை ஏற்க முடியாது. மற்ற கட்சிகளைப்போல அடாவடியாகப் பேச வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், மக்களுக்குப் புரியும் வகை யிலாவது கமல்ஹாசன் பேச வேண்டும்.

கமல்ஹாசன் எனும் நடிகனின் திறமை குறித்து யாருக்கும் எந்தக் கேள்வியும் இல்லை. திரைத்துறையில் இன்னும் அவருக்கான தேவை இருக் கிறது. ஆனால், அரசியலில் இருக்கிறதா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி யாகவே இருக்கிறது. கிராமசபைக் கூட்டங்களைப் பற்றி உரக்கப் பேசும் கமல்ஹாசன், உள்ளாட்சித் தேர்தலில் தன் கட்சியைக் கரைசேர்க்க ஒன்றுமே செய்யவில்லை. கடைசி நேரத்தில், கட்சி நிர்வாகிகளுக்குக் காலக்கெடு விதித்தால் மட்டும் வேலைகள் நடந்துவிடுமா? கட்சி நிர்வாகிகளிடம் அவரின் இத்த கைய அணுகுமுறைதான் கட்சியி லிருந்து பலரை வெளியேறச் செய்திருக்கிறது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்குள் அவர் இவற்றையெல்லாம் சரிசெய்து கொள்ளா விட்டால், கண்டிப்பாக அந்தக் கட்சி காணமால்போகும்” என எச்சரிக்கிறார்கள்.



இன்னும் காலமிருக்கிறது கமல்ஹாசன்... மக்களை மய்யப் படுத்தி களப்பணி ஆற்றுங்கள். தேர்தலில் உங்கள் உழைப்புக்கான நீதியை மக்கள் வழங்குவார்கள்! ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(i) Watering the ........................................ ( Plants, Radio, Book )

(ii) Washing the ........................................ ( Television, Clothes, Clock )

12. தமிழ்க் கருத்தை எழுதுக.

(i) Is this yours? : ..........................................................................................

(ii) Can I help you? : ..........................................................................................

13. சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக.


වකුප්පරෙ : ...........................................................................

14. தமிழ்க் கருத்தை எழுதுக.

என்ன லமய் : ...........................................................................

15. ஆயிரத்தினிடம் 9, பத்தினிடம் 5, பத்தாயிரத்தினிடம் 4, நூறினிடம் 0, ஒன்றினிடம் 1 ஆகவுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.


...........................................................................................................................

16. 

இவ் இலக்கங்களைப் பயன்படுத்தி 40 000 இற்கும் 60 000 இற்கும் இடைப்பட்ட எண்கள் இரண்டை எழுதுக.


.................................., ..................................

17. அருகே தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{4}$ பங்கினை நிழற்றுக.
(பேனை அல்லது பென்சில் பயன்படுத்தவும்.)



18. ix + iv = ☐ வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய உரோமன் எண்ணை எழுதுக.

.........................................................................

19. 

(i) தரப்பட்ட உருவினுள்ளே செங்கோணங்கள் எத்தனை உண்டு?


.........................................................................

(ii) இவ்வுருவைச் சமச்சீராகப் பிரிக்கும் இரண்டு கோடுகளை உருவில் வரைந்து காட்டுக.

20. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக ஊற்றும் போது ஒரு குவளையில் உள்ள நீரின் அளவை எழுதுக.

.........................................................................

21. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

| வடிவம் | பெயர் | விளிம்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
|  | ........................ | ........................ | ........................ | ........................ |

22. பாடசாலை ஒன்றில் 30 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய ஆறு வகுப்பறைகளும், 35 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய நான்கு வகுப்பறைகளும் இருந்தன. எனின் பத்து வகுப்பறைகளிலும் இருக்கக் கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..................................................................


23. என்னிடமுள்ள பென்சிலின் நீளம் 13cm 5mm ஆகும். தம்பியிடம் இருந்த பென்சிலின் நீளம் எனது பென்சிலின் நீளத்திலும் 4cm 7mm குறைவானது.

(i) தம்பியிடமிருந்த பென்சிலின் நீளம் யாது? ....................cm ..........................mm

(ii) என்னிடமும் தம்பியிடமும் இருந்த பென்சில்களின் மொத்த நீளம் யாது?

....................cm ..........................mm

24. P, Q, R, S, T, U சில நகரங்கள் அமைந்துள்ள விதம் தரப்பட்டுள்ளது.




(i) Q நகரமானது S நகரத்திற்கு எத்திசையில் உள்ளது?

.............................................

(ii) நகரம் P ஆனது T யிற்கு ............................................ திசையிலும் .................... இற்கு வடமேற்குத் திசையிலும் காணப்படுகின்றது.

25. முற்பகல் 6.00 இற்கு நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட பேருந்து 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் கண்டியை அடைந்தது. அங்கு 30 நிமிடங்கள் தாமதித்த பின் 2 மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின் கொழும்பை அடைந்தது. பேருந்து கொழும்பை அடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்திற்கேற்ப எழுதுக.

..................................................................

26. 620 தோடம்பழங்களில் 80 ஐ மீதப்படுத்தி வைத்து ஏனையவற்றை ஆறு பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

..................................................................

27. ஒரு தேயிலைத்தோட்டத்தில் முதல் நாளில் 39kg 900g தேயிலைக் கொழுந்தும் இரண்டாம் நாளில் 55kg 850 g தேயிலைக் கொழுந்தும் பறிக்கப்பட்டது. இரு நாட்களும் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

..................................................................

# 'பட்ஜெட்' கூட்டத் தொடர் முடிந்ததும் அமைச்சரவையில் மாற்றம் வரும்

## அரச தகவல்கள் தெரிவிப்பு



வரவு - செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னர், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தவும் ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகி, டிசெம்பர் 10ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மாற்று வழியை நாடுவோம்!

## அரசுக்குப் பங்காளிகள் எச்சரிக்கை

கொழும்பு, நவ.09

**“மக்களுக்கான பயணத்தை அரசு மேற்கொள்ளாவிட்டால் பங்காளிக் கட்சிகளுக்கு மாற்று வழியை நாட வேண்டிவரும்.”**

- இவ்வாறு அரச தலைமைக் கட்சிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண.

“தேர்தலுக்கு முன்னர் பங்காளிக் கட்சிகளுக்கு இந்த அரசு பல உறுதிமொழிகளை வழங்கியது. அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. எனக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. இன்னும் சாதாரண எம்.பியாகவே இருக்கின்றேன். எனவே, மக்களுக்கு நன்மை பயக்காவிட்டால், அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படாவிட்டால் மாற்று வழியை நாடுவோம்” என்றும் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரமற்ற கைப்பாவை என்றும், சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான மோசமான அமைச்சரவையே தற்போது உள்ளது என்றும் இலங்கை கம்யூனிஸ் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் டியூ குணசேகர



அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அமைச்சர்களான விமல் வீரசன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் அரசை எச்சரித்துள்ளனர். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 45 பேர் சிக்கினர்

கொழும்பு, நவ. 09

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நாட்டில் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 907ஆக அதிகரித்துள்ளது. (இ)

# சஜித் அணியை மாற்று சக்தியாக மக்கள் இன்னமும் கருதவில்லை

## பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

ஐக்கிய மக்கள் சக்தியை மாற்று அரசியல் சக்தியாக மக்கள் இன்னும் கருதவில்லை என்று அக்கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மீரிகம பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொன்சேகா எம்.பி. மேலும் கூறியதாவது:-





“தற்போதைய அரசின் மீது அதிருப்தி கொண்டுள்ள மக்கள் மாற்று அரசியல் சக்தியாக, ஐக்கிய மக்கள் சக்தியை இன்னும் கருதத் தொடங்கவில்லை.

சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக வாக்களித்த 50 வீதமானவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட கட்சியின் பல உறுப்பினர்கள் மீது எவ்வித ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களும் கிடையாது. ஊழல், மோசடிகளைத் தடுப்பதாகக் கூறி ஆட்சிப்பீடம் ஏறிய நல்லாட்சி அரசைச் சேர்ந்தவர்களில் சிலரே ஊழல், மோசடிகளில் ஈடுபட்டனர்” - என்றார். (இ)

# மிகவும் வலுவான 'பட்ஜெட்' சமர்ப்பிக்க பஸில் திட்டம்



கொழும்பு, நவ. 09

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை மிகவும் வலுவானதாகச் சமர்ப்பிப்பதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச திட்டமிட்டுள் ளார் என்று அரச வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு, வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இம்முறை வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பின்போது, பெரும் எண்ணிக்கையிலானோரின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் வேலைத் திட்டத்துக்கு அமைவாக, நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் அபிப்பிராயங்களும் இதற்குப் பெறப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பொருளாதாரத்துக்கு மிகுந்த அழுத்தம் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, கொரோனா சவால்களை வெற்றிகொண்டு, மிகவும் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அரச வட்டார தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ)

# இலங்கையிடம் 8 மில்லியன் அமெ. டொலரை நட்டஈடாகக் கோருகின்றது சீன உர நிறுவனம்

கொழும்பு, நவ. 09

விஞ்ஞான ரீதியான பரிசோதனை முடிவுகளை மீறி, சோதனை முடிவுகளைத் தவறாகக் குறிப்பிட்டமை மற்றும் பொய்யான சோதனை முடிவைக்கொண்டு தவறான பிரசாரங்களை முன்னெடுத்தமை என்பவற்றுக்காக, விவசாய அமைச்சின் கீழுள்ள தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையிடமிருந்து 8 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு கோரி சர்ச்சைக்குரிய சீன உர நிறுவனம் சட்டக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையின் அலட்சியத்தாலும் மற்றும் தவறான அறிக்கைகள் காரணமாகவும் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது எனச் சீன உர நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட, ஹிப்போ ஸ்பிரிட் கப்பலில் உள்ள சேதன உரத்தில் அர்வீனியா எனப்படும் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் இல்லை என்றும், அதில் அதிக பாதுகாப்பான மற்றும் அதிக திறன் கொண்ட சேதன உரமே இருக்கின்றது என்றும் சீன கிண்டாவோ சீவிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி கடிதம் கிடைத்த மூன்று நாட்களுக்குள் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த சட்டக் கடிதம் குறித்து தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையின் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் துஷார விக்கிரமாராச்சியிடம் ஊடகங்கள் வினவியபோது, இதுவரை தமக்கு அக்கடிதம் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்று பதிலளித்துள்ளார். (இ)



# பதற்றத்துக்கு மத்தியில் போர் ஒத்திகையில் ஈரான்!

தெஹ்ரான், நவ. 09

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்காவுடன் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மஸ் நீரிணைக்கு அருகே ஈரான் தனது வருடாந்திர போர் ஒத்திகையைத் தொடங்கியுள்ளது.

சுமார் 20 சதவீத எண்ணெய் கப்பல்களின் சர்வதேச வர்த்தக வழித்தடமாகப் பயன்படும் இந்தப் பகுதியில்தான், அண்மையில் அமெரிக்கா தனது பி-1பி லான்சர் ரக குண்டுவீச்சு விமானத்தைப் பறக்கச் செய்தமை நினைவுகூரத்தக்கது.

வல்லரசு நாடுகளுடன் ஈரான் மேற்கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தம் முறிவதைத் தடுப்பதற்கான பேச்சு ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் மீண்டும் தொடங்கவுள்ள நிலையில் இந்தப் போர் ஒத்திகை நடைபெறுகினறமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மெக்சிக்கோ விபத்தில் 19 பேர் உயிரிழப்பு

மெக்சிக்கோ சிற்றி, நவ. 09

மெக்சிக்கோவில் உள்ள நெடுஞ்சாலையொன்றின் சுங்கச் சாவடி மீதும் வாகனங்கள் மீதும் லொறி மோதி ஏற்பட்ட விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

பியூப்ளா மாகாணத்தை தலைநகர் மெக்சிக்கோ சிற்றியுடன் இணைக்கும் நெடுஞ்சாலையிலுள்ள சுங்கச்சாவடிக்கு வந்த லொறி ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து அந்த சுங்கச்சாவடி மீது மோதியது. இதனைத் தொடர்ந்து அங்கிருந்த 6 வாகனங்களின் மீதும் அந்த லொறி மோதியது. இதன் விளைவாக வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர். (ஐ)

## சூடான் இராணுவ ஆட்சியாளர்களால்

# போராட்டக்காரர்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்ப்பு

- போராடிய ஆசிரியர்கள் கைது
- துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டது

கார்ட்டோம், நவ. 09

சூடானில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை எதிர்த்தும் ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தியும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவ ஆட்சியாளர்கள் கண்ணீர் புகை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

அத்துடன், போராட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர்கள் பலரும் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த மாதம் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒத்துழையாமை இயக்கத்தின் சார்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தின்போதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சிவில் ஆட்சி மாற்றத்துக்கு இராணுவம் அமைதியான முறையில் ஒத்துழைக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

சூடானில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிக்கும் நோக்கில் பேச்சு நடத்துவதற்காக ஐக்கிய அரபு மத்தியஸ்தர்கள் தலைநகர் கார்ட்டூமுக்கு வந்துள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட பிரதமர் அப்துல்லா ஹம்டொக் தொடர்ந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தங்களுடன் ஒத்துழைக்குமாறு இராணுவ ஆட்சியாளர்கள் அவருக்கு கடும் அழுத்தத்தை பிரயோகித்து வருகின்றனர் என்று சூடானில் உள்ள சர்வதேச ஊடகங்களின் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



சூடானின் இராணுவம் மற்றும் பொதுமக்கள் இணைந்த ஆட்சியை அதிரடியாகக் கவிழ்த்து கடந்த மாதம் முழுமையாக இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. சூடான் பிரதமர் அப்துல்லா ஹம்டோக், அவரது அமைச்சர்கள் சிலர் மற்றும் பல சிவில் சமூகத் தலைவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அங்கு இராணுவம் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து தலைநகர் கார்ட்டூமில் வீதிகளில் இறங்கி இராணுவ ஆதரவுக் குழுக்கள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

சூடானில் 30 வருடங்களாக பிரதமராக இருந்த உமர் அல் பஷீர் பொதுமக்களின் தொடர் போராட்டத்தை அடுத்து கடந்த 2009 ஆம் ஆண்டு பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எதிர்காலத்தில் உயிரியல் ஆயுதத்தை பயங்கரவாதிகள் பயன்படுத்தலாம்!

## உலக தலைவர்களுக்கு பில் கேட்ஸ் எச்சரிக்கை

நியூயோர்க், நவ. 09

எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் உயிரியல் ஆயுதங்களை தாக்குதல்களுக்குப் பயன்படுத்தும் சாத்தியங்கள் மிக மிக அதிகம் உள்ளனவென மைக்ரோ சொப்ட் நிறுவுநரும் உலகப் பெரும் பணக்காரர்களில் ஒருவருமான பில் கேட்ஸ் எச்சரித்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களை முறியடிக்க இப்போதே தயா ராக வேண்டும் என ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஊடாக உலகத் தலைவர்க ளுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் பரபரப்பான விமான நிலையங்களில் பெரியம்மை காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸை ஓர் உயிரியல் ஆயுதமாக பயங்கரவாதிகள் பயன்படுத்தக் கூடும். இதனை எதிர்கொள்ள உலக தலைவர்கள் தயாராக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிட, பெருந்தொற்றை எதிர்கொள்ள உலக சுகாதார நிறுவனம் பல நூறு கோடி டொலர்கள் கட்டமைப்பு கொண்ட குழு ஒன்றையும் நிறுவ வேண்டும் எனவும் பில்கேட்ஸ் கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பான ஆய்வுகள், கண்டிப்பாக செலவு அதிகம் கொண்டவையாக இருக்கும். ஆனால், அதிக பலனைத் தரும். இதற்காக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தாராளமாக செலவு செய்ய முன்வர வேண்டும். இதன் மூலம் அடுத்த தொற்றுநோய்களை எதிர்கொள்ள உலக நாடுகள் தயாராக வேண்டும்- என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# ஹக்கர்கள் பற்றி தகவல் அளிப்போருக்கு ரூ. 200 கோடி பரிசு அறிவித்தது அமெரிக்கா

வாஷிங்டன், நவ. 09

டார்க்சைட் (DarkSide) என்னும் இணையவழித் தாக்குதல் குழுவினர் பற்றிய தகவல்கள் தெரிவித்தால் ஒரு கோடி அமெரிக்க டாலர் (சுமார் 200 கோடி இலங்கை ரூபாய்) சன்மானமாக வழங்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

இணையம் மூலம் தரவுகளைத் திருடிக்கொண்டோ அல்லது இணையதளம் இயங்குவதை முடக்கி வைத்த பின்னரோ, தரவுகளை ஒப்படைக்க அல்லது இணையதளத்தை மீண்டும் இயங்க வைக்க பிணைத் தொகை (ரேன்சம்) கேட்டு ஹக்கர்கள் தாக்குதல் நடத்துவது ரேன்சம்வேர் தாக்குதல் எனப்படும்.

கடந்த மே மாதம் டார்க்சைட் குழுவினர் நடத்திய இணையத் தாக்குதலால் அமெரிக்காவின் கிழக்கு கடலோர பகுதியில் உள்ள 5,500 மைல் (8,850 கிலோ மீற்றர்) நீளமுள்ள எரிபொருள் குழாய்களின் இயக்கம் முடக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியாவில் 36 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு!

புதுடில்லி, நவ. 09

இந்தியாவில் ஒட்டுமொத்தமாக 36 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் தீவிரமான ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று பாதிப்பின் பின்னர் குழந்தைகளுக்கு சரிவிகித ஊட்டச்சத்து கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஏழை குடும்பங்களை சேர்ந்த குழந்தைகள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் 34 மாநிலங்களில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 36 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், இந்த ஆண்டு ஒக்ரோபர் வரையில் 17 இலட்சத்து 76 ஆயிரம் சிறுவர்கள் தீவிரமான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உலக பட்டினிக் குறியீட்டிலும் இந்தியா கடந்த 2020ஆம் ஆண்டில் 94 ஆவது இடத்தில் இருந்தநிலையில் 2021ஆம் ஆண்டில் 101 இடத்துக்கு பின்தள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஞ்சா, பணத்துடன் எட்டு பேர் மாட்டினர்

கொழும்பு, நவ. 09

கெஸல்வத்தையில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது பெருந்தொகை கஞ்சா மற்றும் 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பணம் ஆகிய வற்றுடன் 8 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

75.5 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் 3 சந்தேகநபர் களும், 3 கிராம் ஹெரோயின் மற்றும் 6 கிராம் மெத்தம் பெட்டமைன் போதைப் பொருளுடன் மேலும் 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 7 இலட் சத்து 90 ஆயிரம் ரூபா பண மும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு - 12, கொழும்பு - 15 ஆகிய பகுதிகளில் வசிக் கும் 18 வயதுக்கும் 48 வயதுக் கும் இடைப்பட்ட சந்தேக நபர்கள் 8 பேரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

தம்பலகாமம், நவ. 09

திருகோணமலை, தம்பல காமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட முள்ளிப்பொத்தானைப் பகுதியில் ரயில் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர், சம்பவ இடத்திலேயே உயிரி ழந்துள்ளார் என்று பொலிஸா ர் தெரிவித்துள்ளனர்.

முள்ளிப்பொத்தானையை சேர்ந்த 21 வயதுடைய ஹமீட் முபீட் என்பவரே நேற்றுமுன் தினம் மாலை கொழும்பிலி இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயில் மோதி மரணித்துள்ளார்.

குறித்த நபர் காதில் ஹெட் செட் அணிந்த நிலையில், கையடக்கத் தொலைபேசியு டன் ரயில் தண்டவாளத்தில் நின்றபோது ரயில் மோதியுள் ளது என ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்ப லகாமம் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (இ)

# வீடுகளில் சிகிச்சை பெறும் தொற்றாளர்கள் அதிகரிப்பு

### ஆபத்து நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்றார் விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன



கொழும்பு, நவ. 09

**நாட்டில் கடந்த இரு வாரங்களில் வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.**

தற்போது 4 ஆயிரம் பேர் வரை கொரோனாத் தொற்றுக் குள்ளாகி வீடுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், இவர்களில் கடந்த இரு வாரங் களில் மாத்திரம் 3 ஆயிரம் புதிய கொரோனா நோயாளர்களாகப் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கடந்த 24 மணித் தியாலங்களில் சுமார் 500 கொரோனா நோயாளர்கள் புதிதாக வீடுகளில் இருந்து சிகிச்சை பெறுவதற்குப் பதிவு செய்துள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

### இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அறிவிக்க

## துரித தொலைபேசி இலக்கம் அறிமுகம்




கொழும்பு, நவ. 09

நாட்டில் எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தத்துக்கு முகம்கொடுப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தயாராக இருக்கின்றது என அந்த நிலையம் தெரிவித்துள் ளது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் அனர்த்த நிலைமை ஏற்பட்டால் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற துரித தொலை பேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் அந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தச் சேவை 24 மணி நேரமும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 09

சீரற்ற காலநிலை காரணமாக கெனியன் மற்றும் மேல் கொத் மலை நீர்த்தேக்கங்களின் சில வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் தெரிவித் துள்ளது.

இதற்கமைய, கெனியன் நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவு களும், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவும் திறக்கப்பட்டுள்ளன என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதன் காரணமாக கெனியன், லக்ஸபான, புதிய லக்ஸபான, பொல்பிட்டி மற்றும் விமலசுரேந்திர ஆகிய நீர்மின் உற்பத்தி நிலை யங்கள் ஊடாக அதிகளவில் மின்னுற்பத்தி இடம்பெறுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## இறப்பர் தோட்டத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

களுத்துறை, நவ. 09

களுத்துறை, ஹொரண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போருவதண்டன பிரதேசத்தி லுள்ள இறப்பர் தோட்டத்தில் அடையாளம் காணப்படாத ஆணொருவரின் சடலத்தை ஹொரணப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக ஹொரண வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஹொரண பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

## வீடொன்றுக்கு அரை மூடி தேங்காய்: அரசின் அறிவிப்பால் மக்கள் சீற்றம்

கொழும்பு, நவ. 09

தென்னம் ஆராய்ச்சி சபை யின் தலைவர் சாரங்க அழஹ பெரும வெளியிட்ட கருத்து நாட்டு மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் நாள் ஒன்றுக்கு அரைமூடி தேங்காயைப் பயன்படுத்து மாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சரியான முறையில் பயன்படுத்தி னால் அது சாத்தியம் என வும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.



இலங்கையில் வீடுக ளில் தேங்காய் பயன்பாடு நூ ற்றுக்கு 30 வீதமான அளவு விரயமாவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

நாட்டின் வருடாந்த தேங்காய் அறுவடையில் 70 வீதம் உள்நாட்டு பாவனைக்கா கவே பயன்படுத்தப்படுவதா கவும் அவர் கூறியுள்ளார்.

கையால் தேங்காய் பால் பிளிந்தால் 20 - 30 சதவீதம் தேங்காய்ப்பால் கிடைக்கும் எனவும், உரலில் இடித்து அல்லது அம்மியில் அரைத்து பால் எடுத்தால் 50 சதவீத தேங்காப்பாலைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (இ)

# இரு வேறு விபத்துக்களில் இருவர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, நவ. 09

இரு விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக புத்தளம் - சிலாபம் வீதி, நல்லதரன்கட்டுவ பிரதேசத்தில் வான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் சிலாபம் வைத்தியசாலை யில் சேர்க்கப்படும்போது மரணமடைந்துள்ளார்.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்பு டைய வானின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பதுளை, ரிதிமாலியத்த பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பிபிலை பேதியா கொட பிரதேசத்தில் மோட் டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி யில் குடைசாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் பிபிலை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரண மடைந்துள்ளார்.

திரியகம, யல்வல பிர தேசத்தை சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (இ)

## சு.கவின் எதிர்காலம் குறித்து வெல்கம எம்.பி. எச்சரிக்கை!



கம்பஹா, நவ. 09

தலைமைப் பதவியில் உள்ளவர்களின் பலவீனம் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கேகாலையில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சியில் பதவியில் இருப்பவர்களில் மாற்றம் ஏற்படவில்லையெனில் கட்சிக்கு எதிர்காலம் இருக்காது எனவும் அவர் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

# தேசவழமை சட்டங்கள் போன்றவை எந்தத் தரப்பையும் பாதிக்கவில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை மூலம் தெரிவிப்பு

எக்சத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

கொழும்பு, நவ. 09

"நாட்டின் அரசமைப்புக்கும், இன ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞான சார தேரர் தலைமையில் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் ஆலோசனையைப் பெறாமல், நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபரைப் புறக்கணித்து இந்தச் செயலணி நியமிக்கப்பட்டுள்ளமை நகைப்புக்குரியதாகும். ஆகவே, இன ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணி முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்துகின்றோம்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதைத் தொடர்ந்து காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் டி. எஸ். சேனாநாயக்க நாட்டின் தனித்துவ அடையாளத்தை உறுதிப்படுத்தியதுடன், சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் ஆகிய இன மக்களை ஒன்றிணைத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதை நாட்டின் தேசிய கீதத்தில் "ஒரு தாயின் பல பிள்ளைகள்" என்ற சொற்பதத்தை இணைத்து உறுதிப்படுத்தினார். அதே போல் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளிலும் அவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

அதேபோல் இலங்கையின் தனித்துவ அடையாளத்துடன் குறைகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வது அவசியமாகும். ஆகவே, 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணி அரசமைப்புக்கு முரணானது.

இந்த நாட்டில் பல்வேறு சமூகத்தினர், பிரிவினருக்காக வெவ்வேறான சட்டங்கள் காணப்படுகின்றன. சிங்கள இராஜதானியின் சட்டம் தற்போது மேல் நாட்டுச் சட்டம் என அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்தச் சட்டம் 700 வருட காலம் பழமை வாய்ந்தது.

உரோமானியச் சட்டம் 600 வருடகாலமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் 500 வருட கால பழமை வாய்ந்த தேசவழமைச்சட்டம் யாழ்ப்பாணத்தை மாத்திரம் அடையாளப்படுத்தியதாகவும், தென்னிந்தியாவில் கூட செயற்படுத்தப்படாத பழமையானதாகவும் காணப்பட்டது.

அதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாணத்தில் 'முக்குவர்' என்ற பெயரில் ஒரு சமூகத்தினர் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கும் தனித்த சட்டம் காணப்பட்டது.

20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் முக்குவர் என்ற சமூகத்தினர் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினருடன் ஒன்றிணைந்ததால் சமூகத்திலிருந்து தூரமாக்கப்பட்டார்கள்.

வரலாற்றுக் காலம் தொடக்கம் நாட்டில் பல்வேறு சட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அச்சட்டங்கள் எத்தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

அச்சட்டங்களை நீக்குவது இலங்கை இராச்சியத்தைக் கட்டியெழுப்புவதற்காக இயற்றப்பட்ட அனைத்து சட்டங்களையும் இரத்துச் செய்வதற்கு ஒப்பானதாக அமையும்.

நடைமுறையில் உள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை முரண்பாடற்ற வகையில் திருத்தியமைக்க முடியும்.

பிரதானமாக தேசவழமைச் சட்டத்துக்கமைய திருமணம் முடித்த பெண்களின் உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்ற குறைபாட்டைத் திருத்தியமைக்க வேண்டும்.

அதேபோல் முஸ்லிம் விவாகச் சட்டத்தில் ஆண் ஒருவர் 4 திருமணங்களைச் செய்ய முடியும் என்பதுடன் திருமணமான பெண்களின் உரிமைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைத் திருத்தம் செய்வதற்கான சட்டவரைவு 2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது.

அச்சட்டவரைவு நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இலங்கையில் ஆண் மற்றும் பெண் ஆகியோர் சமமாக மதிக்கப்பட வேண்டும். அத்துடன், நாட்டில் பெண்களின் விகிதம் ஆண்களை காட்டிலும் உயர்மட்டத்தில் உள்ளது. ஆகவே, பெண் உரிமை மதிக்கப்பட வேண்டும். அத்துடன் தாராளப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான செயலணியின் செயல்பாடுகள் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பில் இது வரை காலமும் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைப் பலவீனமடையச் செய்வதுடன், இனங்களுக்கிடையிலான நல்லுறவை இல்லாதொழிக்கும். இந்தச் செயலணி குறித்து முதலில் பாராளுமன்றில் விவாதம் இடம்பெற வேண்டும்.

அதனைத் தொடர்ந்து 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படுவதுடன் அதற்கு நீதி அமைச்சினதும், விசேட நீதியரசர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அமைச்சரவையின் ஆலோசனைகளைப் பெறாமல் நீதி அமைச்சரையும், சட்டமா அதிபரையும் புறக்கணித்து 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை முற்றிலும் கேலிக்கூத்தானது.

ஆகவே, இன ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயலணி முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்துகின்றோம்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## புதையல் தோண்டிய மூவர் கைது

புத்தளம், நவ. 09

புத்தளம் மாவட்டம், சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகன்வெள, பங்கதெனிய பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ, சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 15, 30, 35 வயதுகளையுடைய மூவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)




## 3 விபத்துக்களில் மூவர் மரணம்!

கொழும்பு, நவ. 09

மூன்று விபத்துக்களில் மூவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய குருநாகல், தம்புள்ளை வீதி - மெல்சிறிபுர நகரில், தனியார் பஸ்ஸொன்று பாதசாரி ஒருவர் மீது மோதிய தில் பாதசாரி மரணமடைந்தார். பல்லேவத்த பிரதேசத்தை சேர்ந்த 60 வயது நபரே உயிரிழந்தார்.

மாத்தளை, தம்புள்ளை பொலிஸ் பிரிவுகுட்பட்ட மாரிஆராவ வீதி, கிரிவெல் கொட பிரதேசத்தில் கப்ரக வாகனமொன்று எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் உயிரிழந்தார். மாரி ஆராவ பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது நபரே மரணமடைந்தார்.

அநுராதபுரம், தம்புத்தேகம வீதி, ஹுரிகஸ்வெள சந்தியில் டிரக்டர் வாகனமொன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் உயிரிழந்தார். கல்கமுவ பிரதேசத்தை சேர்ந்த 23 வயது இளைஞரே மரணமடைந்தார். (இ)

## வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம்

மாத்தறை, நவ. 09

வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மாத்தறை, பிட்டபெத்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நமுனுகுலவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவரின் பெயர், விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பிட்டபெத்தர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நமுனுகுலவத்தைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை நடமாடும் சுற்றுலாப் பொலிஸார் நேற்று சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் குறித்த நபரின் சடலம் கிடப்பதைப் பொலிஸார் கண்டுள்ளனர்.

இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## விபச்சார விடுதி முற்றுகை: நான்கு பெண்கள் சிக்கினர்

கம்பஹா, நவ. 09

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபச்சார விடுதியொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், நான்கு பெண்களையும் கைதுசெய்துள்ளனர்.

குறித்த விடுதியை நடத்திச் சென்ற பெண்ணொருவரும், விபச்சாரத்தில் ஈடுபட்ட மூன்று பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்தனகல்லை, தெஹியத்தகண்டி, கல்பிட்டி மற்றும் நுகவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 - 50 வயதுக்குட்பட்டவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## தமிழர்...

கூட்டமைப்பின் சம்பந்தனை முன்னிலைப்படுத்தி ஒற்றுமை விவகாரங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒளிபரப்பான ஸ்பொட்லைற் நிகழ்ச்சியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தமிழ் தேசிய கட்சிகளுக்கும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வு உள்ளது. தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையில் கருத்தொற்றுமை - இணைந்த செயல்பாட்டை எம்மை சார்ந்தவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தனை முன்னிலைப்படுத்தி ஒற்றுமை விவகாரங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் தமிழரின் பிரச்னையை தீர்க்கும் வல்லமை தமிழ்நாட்டுக்கு உண்டு. சிறுபான்மையினரின் பிரச்னைகளை வைத்து அரசாங்கம் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

பெரும்பான்மையினர் சிறுபான்மை மக்களுக்கு விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டும். மட்டக்களப்பில் பெரும்பான்மையினராக உள்ள தமிழர்கள் முஸ்லிம்களுக்கு பெருந்தன்மையோடு விட்டுக் கொடுப்பை செய்ய வேண்டும். இதேபோன்று முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தமிழர்களுக்கு விட்டுக் கொடுப்பு செய்ய வேண்டும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டால் கிழக்கு முதலமைச்சர் பதவி எமக்கே - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வரவு...

வுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்புக்கு முன்னர் அரசை விட்டு வெளியேறுவது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர் எனவும், ஏனைய பங்காளிக் கட்சியினரும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

வரவு - செலவுத் திட்டம் இந்த வாரம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், பங்காளிக் கட்சிகளை சமாளிக்கும் விதமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் புதன்கிழமை அமைச்சர் விமல் வீரவன்ஸவுடன் தனிப்பட்ட பேச்சுகளை முன்னெடுத்திருந்த பிரதமர், அரசின் சில தீர்மானங்கள் குறித்து தாம் அதிருப்தி அடைந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாட்டை ஆதரித்துள்ள அவர், தற்போதுள்ள நெருக்கடி நிலைமைகளைச் சமாளிக்க தான் தலைமை தாங்குவார் எனவும், ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சருடன் பேச்சுகளை நடத்தத் தான் ஏற்பாடு செய்வார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## பருத்தித்துறையில்...

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் இந்திய கரையோரப் பகுதிகளிலிருந்து இந்தத் தாவரங்கள் கடலலையால் அடித்து வரப்பட்டு கரை ஒதுங்கியிருக்கலாம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை துறைமுகம் தொடக்கம் கிழக்கு பகுதி வரை சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு இந்தத் தாவரங்கள் கரை ஒதுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## மாஸ்க்...

ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. முகக் கவசம் அணியாததுடன் ஊரடங்கு சட்டத்தையும் மீறி நடமாடிய நபருக்கு 15 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார் நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை. (ஐ-02)

# கோவிட் நிலைமை மோசமடையலாம்!

கொழும்பு, நவ. 09

நாட்டில் கோவிட்-19 நோய்த்தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகிறது என்று குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவ வல்லுநர் சஞ்சீவ கொடகந்த தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று காரணமாக கர்ப்பிணி தாய்மார்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாக மருத்துவ வல்லு நர் சஞ்சீவ கொடவத்த சுட்டிக்காட்டினார்.

இந்த எச்சரிக்கையை சரியாக புரிந்து கொள்ளாவிட்டால் அதன் எதிர்கால விளைவு சாதகமாக இருக்காது என அவர் குறிப்பிட்டார்.

## பொலிஸ்...

குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர், அகதிகள் தெரிவித்தது உண்மை என்பது உறுதியானால் இலங்கை பொலிஸாருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் வழங்கும் பயிற்சியை ஸ்கொட்லாந்து நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்கொட்லாந்து பொலிஸார் தங்களது பயிற்சிகள் சர்வதேச மனித உரிமை தராதரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது என தெரிவித்துள்ளனர் எனினும் ஸ்கொட்லாந்து பொலிஸார் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் விவேகத்துடன் செயல்பட வில்லை என விமர்சனங்கள் வெளியாகியுள்ள நிலையில் தான் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசி...

சட்டமா அதிபரால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "கொரோனா தடுப்பூசி இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொள்ளாதவர்களை பொது இடங்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கான சட்ட மூலம் ஒன்றை இலங்கையின் சட்டவரம்புக்கு உட்பட்டு கொண்டுவர முடியுமா என்பதையிட்டு சட்டமா அதிபரிடம் நான் ஆலோசனை கேட்டிருந்தேன்."

"சட்டரீதியாக இதனைச் செய்ய முடியும் என்று எனக்குப் பதில் கிடைத்திருக்கிறது", என்று தெரிவித்த அமைச்சர் கெஹலிய, இது தொடர்பான செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளார் என்றும் குறிப்பிட்டார். அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏற்கனவே இதனைச் செய்துள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்காக கைபேசி செயலி ஒன்றை சுகாதார அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது. இதன்மூலமாக ஒருவர் இரண்டு தடுப்பூசி டோஸ்களையம் போட்டுள்ளாரா என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் - என்றார்.

"இதற்கு எதிராகவும் மக்கள் நீதிமன்றத்துக்குச் செல்லலாம். ஆனால், அதனை நாம் எதிர்கொள்வோம்", எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## ஆசிரியர்...

தீர்வு வழங்க அரசை வலியுறுத்தும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமை நாடு தழுவிய ரீதியில் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு முன்னால் பெரும் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்" என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதற்கமைய சகல வலயக்கல்வி அலுவலகங்கள் முன்பாகவும் இன்று பிற்பகல் 2 மணியளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# 2,500 முதல் 3,500 ரூபாய் வரை சமையல் எரிவாயு விற்பனை

கொழும்பு, நவ. 09

விலை அதிகரிக்கப்பட்டு சமையல் எரிவாயு விற்பனை இடம்பெற்று வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

நாட்டில் தற்போது சமையல் எரிவாயுவுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் எரிவாயு சிலிண்டரின் விலை 2500 ரூபாய் முதல் 3500 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக நுகர் வோர் பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளதோடு, இவ்வாறு விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுவதன் பின்னணியிலும் பெரும்பாலான இடங்களில் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப் பாடு காணப்படுவதாக அறிய முடிகிறது.

இதேவேளை, லிட்ரோ எரிவாயு அடங்கிய கொள்கலன் கப்பல் ஒன்று நாட்டை வந்த டைந்துள்ளதாகவும், விரைவில் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலை நீங்கும் எனவும் லிட்ரோ நிறுவனத் தலைவர் தேஷர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறைந்த விலைக்கு எரிவாயு விற்பனை செய்யக்கூடிய சாத்தியங்கள் இருந்தும் நிதி அமைச்சின் தலையீட்டுடன் செய்துகொள் ளப்பட்ட உடன்படிக்கையி னால் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய நேரிட்டுள்ளது என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் நலின் சமந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் ஒரு மெற்றிக்தொன் எடையுடைய எரிவாயு 600 டொலருக்கு விற் பனை செய்யப்படும் நிலையில், ஓமான் ட்ரேடிங் என்னும் நிறுவனத்திடம் கையொப்பம் செய்து கொண்டமையால் 800 டொலருக்கு கொள்வனவு செய்யவேண்டிய நிலை உரு வாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காரைநகர் கடற்கரையில் இந்திய மீனவரின் சடலம்!

யாழ்ப்பாணம், நவ. 09

கடல் சீற்றம் காரணமாக நடுக்கடலில் படகிலிருந்து தவறி வீழ்ந்த இந்திய மீனவர் ஒருவரின் சடலம் காரைநகர் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் இருந்து கடந்த 2ஆம் திகதி மூவர் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

கடல் சீற்றம் காரணமாக படகிலிருந்து மீனவர் ஒருவர் கடலில்தவறி வீழ்ந்து மாயமானார். மாயமான மீனவரை கடந்த 4 நாள்களாக சக மீனவர்கள் தேடிவந்த நிலையில் நேற்று மதியம் அவர் காரைநகர் கடற்கரையில் சடலமாக கரை ஒதுங்கினார்.

சடலம் உடற்கூறுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# எகிறும் தொற்று நேற்று 679 பேர்

கொழும்பு, நவ. 09

நாட்டில் மேலும் 679 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 935 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 312 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 495 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# அரசை பாதுகாப்பது கடினம்!

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, நவ. 09

கூட்டணி அரசாங்கத்திற்குள் பல அரசாங்கங்களும் எதிர்க்கட்சிகளும் இருக்க முடியாது. அவ்வாறு இருப்பின் முரண்பாடுகள் தோற்றம் பெறும். அரசாங்கத்தை தோற்றுவிப்பதை காட்டிலும், தோற்றுவித்த அரசாங்கத்தை பாதுகாப்பது கடினமானது. அரசாங்கத்திற்குள் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு உள்ளக பேச்சு ஊடாக மாத்திரம் தீர்வுகாண முடியும் என வெளிவிவகாரத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. கூட்டணி கட்சிகளின் கொள்கைகள் மாறுப்பட்டதாகும். மாறுப்பட்ட கொள்கைகள் வெளிப்படும் போது முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெறுவது சாதாரணமானது.

கூட்டணியில் உள்ள அனைத்து பங்காளி கட்சிகள் பொது தேசிய கொள்கைக்கு அமைய தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு உள்ளக பேச்சு ஊடாக மாத்திரம் தீர்வு பெற்றுக் கொள்ள வேண்டும். 'வீட்டின் உள்ளக தீயை வெளியில் கொண்டு செல்ல கூடாது, வெளி தீயை வீட்டுக்குள் கொண்டு வர கூடாது.'என புத்தமத போதனைக்கு அமைய பங்காளி கட்சியினர் செயற்பட வேண்டும்.

கூட்டணி அரசாங்கத்திற்குள் பல அரசாங்கங்களும் எதிர்க்கட்சிகளும் தோற்றம் பெற கூடாது. அவ்வாறு தோற்றம் பெற்றால் முரண்பாடுகள் மாத்திரம் எழும். அரசாங்கம் தொடர்பில் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் பரஸ்பர கருத்துக்களை குறிப்பிட்டுக் கொள்வது அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தும்.

2019 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பை ஏற்கும் போது சர்வதேச மட்டத்தில் பெரும் சவாலை எதிர் கொண்டுள்ளோம் என்பதையும் கோவிட் -19 வைரஸ் தாக்கத்தையும் இன்றும் எதிர்கொள்கிறோம் என்பதையும் பங்காளிக் கட்சியினர் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே, அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புடனும் பொறுமையுடனும் செயல்படுவது அவசியமாகும். என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



பாரிஸ் மாஸ்ரர்ஸ் ரென்னிஸ்:

# ஆறாவது தடவையாக ஜொகோவிச் சம்பியன்

பாரிஸ், நவ. 09

பாரிஸ் மாஸ்ரர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் ஆறாவது முறையாக ஜொகோவிச் பட்டம் வென்றார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த மாஸ்ரர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இந்த ஆட்டத்தில் சேர்பியாவைச் சேர்ந்த முதல் நிலை வீரரான நோவக் ஜொகோவிச் 4-6, 6-3, 6-3 என்ற நேர் செற்களில் ரஷ்யாவைச் சேர்ந்த டேனில் மெட்விடேவை தோற்கடித்து 6ஆவது முறையாக பட்டம் வென்றார்.

இதன் மூலம் அமெரிக்க ஓப்பன் இறுதியாட்டத்தில் மெட்விடேவிடம் அடைந்த தோல்விக்கு ஜொகோவிச் பழிதீர்த்துக் கொண்டார். ஆயிரம் தரவரிசை புள்ளி களை வழங்கும் இத்தகைய மாஸ்டர்ஸ் பட்டத்தை ஜொகோவிச் வெல்வது இது 37-வது முறையாகும். (ஐ)

# பாகிஸ்தான் செல்கிறது அவுஸ்திரேலியா அணி!

சிட்னி, நவ. 09

2022ஆம் வருடம் பாகிஸ்தானுக்கு சென்று 3 டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபது - 20 ஆட்டத்தில் விளையாடுகிறது அவுஸ் திரேலிய அணி. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது.

டெஸ்ட் தொடர் 2022 மார்ச் 3ஆம் திகதி தொடங்கி மார்ச் 25ஆம் திகதி நிறைவடைகிறது. கராச்சி, ராவல் பிண்டி, லாகூரில் டெஸ்ட் போட்டிகள் நடைபெற வுள்ளன. ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடர்கள் லாகூரில் நடைபெறவுள்ளன. மார்ச் 29ஆம் திகதி தொடங்கும் ஒருநாள் தொடர் ஏப்ரல் 2ஆம் திகதி முடிவடையும். இருபது - 20 போட்டி ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1998ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு மீண்டும் சுற்றுப்பயணம் செய்கிறது அவுஸ்திரேலிய அணி. 24 வருடங்கள் கழித்து அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்குச் செல்வதால் இந்தத் தொடர்கள் குறித்து எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. (ஐ)



# வெற்றியுடன் வெளியேறியது இந்தியா!



டுபாய், நவ. 09

ரோஹித், ராகுல் அரைச்சதம் அடிக்க நமீபியாவை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது இந்திய அணி.

இருபது - 20 உலகக் கிணண்த் தொடரின் அரை யிறுதி சுற்றுக்கு இரு அணிகளும் செல்வதற்கான வாய்ப்பை இழந்து விட்ட நிலையில் இந்தப் போட்டி யில் இரு அணிகளும் மோதின.

டுபாயில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

தொடக்க வீரரான ஸ்ரீபன் பார்ட் 21, டேவிட் வைஸ் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க, ஜான் ப்ரைலிங்க் 15 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக் காமல் இருந்தார்.

இந்திய அணியின் சார்பில் பந்துவீசிய அஸ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், பும்ரா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

133 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்தத் தொடங்கியது இந்திய அணி.

கே. எல். ராகுல், ரோஹித் சர்மா இணை அபாரமான தொடக்கத்தை ஏற்படுத்தியது. 37 பந்துகளில் 2 சிக்ஸ ர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 56 ஓட்டங்களை எடுத்த ரோஹித் சர்மா ஆட்டமிழந்து வெளியேறினார்.

மறுமுனையில் நின்ற ராகுலுடன் இணைந்தார் சூரிய குமார் யாதவ். 35 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பௌண்ட் ரிகளுடன் அரைச்சதம் கடந்தார் கே. எல். ராகுல்.

15.2 ஓவர்களில் இந்தியா ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

கே. எல். ராகுல் 54 ஓட்டங்களையும், சூரியகுமார் யாதவ் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றார்.

நமீபியாவின் சார்பில் பந்துவீசிய ஜான் ப்ரை லிங்க் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பிரம்மன்,டார்லிங் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு